

உ

சிவமயம்.

# சைவசமய

# திருமணம்

உ

ஸ்ரீ சிவகுருவே துணை.

## திருமூலர் திருமந்திரம்

எங்குந்திருமேனி, யெங்குஞ்சிவசத்தி
எங்குஞ்சிதம்பர மெங்குந்திருநட்டம்
எங்குஞ்சிவமாய் இருத்தலாலெங்கெங்கும்
தங்குஞ்சிவனருள் தன்விளையாட்டதே.


## அப்பர்

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லால்
நலமிலனுடொறு நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே.

---

**சைவசமய ஆச்சாரியார்கள்** காட்டிய வழியைப் பின்பற்றிய, பல மெய்யன்பர்கள் கோரியபடி, சைவசமயத்திருமண நிகழ்ச்சியை, சுருக்கமாயும், லெகுவாயும் அன்புடன் ஆஸ்திகர்கள் சுபசோபன சமயத்தில், வேத, நாத, கீத, முறையில் உகந்தவர்களைக்கொண்டு, உபயோகித்து, ஸத்வகுணமுள்ள, உத்தம பலன்களைப் பெற்று மணமக்களாகிய, தம்பதிகள் செல்வமுடன் நீடூழிவாழவேண்டி, ஆதார நூல்களைக்கொண்டும், இறைவன் திருவருளை நாடிய சிவாசாரியர்கள், ஓதுவார்கள் திருமண சபையோர்கள், முதலான மெய்ஞான அன்பர்களுடன் கர-ஹு ஆவணி-மீ 25உ ஒத்திகை ஆண்டவரருளால் நேர்ந்ததினும், சிவஸ்ரீ ஸ-. தியாகராஜக்குருக்கள் அவர்கள் உஜித முயற்சியினும், ஸ்ரீ நாரண காரண பூரணர் புண்ணியத்தாலும், புஸ்தக ரூபமாய் வெளியிடலாயிற்று. மெய்யன்பர்கள் சுவானுபவத்தினால், நற்பயனை அடைய இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

அன்பர்களுக்கு அன்பன்,
S. R. தெண்டபாணி குருக்கள்,
திருச்சிராப்பள்ளி.



உ

சிவமயம்

# சைவசமய திருமணம்

## ஸ்ரீ கணேசப்பெருமான் கோயில் தரிசனம்

## பெண் வகையராக்களுடன் சென்று பிரார்த்தனை செய்து அனுமதி பெறல்

## அதே விதம் ஆண் வகையராக்களுடன் பிரார்த்தனை செய்து அனுமதி பெறல்

---

**ாப்பிள்ளை அழைத்தல்:**

### ஸ்ரீ கணேச பூஜை (சங்கல்பம்)

### இஷ்ட தெய்வ வழிபாடு (சம்பந்தர்)

*பிடியத னுருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்*
*கடி கணபதி வர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.*

### புண்ணியாகவாசனம்

(அப்பர்)

*கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப்பொரியரவும் வைத்தார்*
*திங்களைத் திகழவைத்தார் திசை திசை தொழவும் வைத்தார்*
*மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்*
*அங்கையுளனலும் வைத்தாரைய னையாறனாரே.*

### பஞ்சகவ்ய பூஜை

(அப்பர்)

*பாவமும் பழி பற்றறவேண்டுவீர்*
*ஆவின் அஞ்சு உகந்தாடும் அவன்கழல்*
*மேவராய் மிகவும் மகிழ்ந்து உரைகுமின்*
*காவலாளன் கலந்து அருள் செய்யுமே.*

## இல்லற முகூர்த்தகோல் பூஜை

(அப்பர்)

*நான்முகனாய் மாபூதமாய் மருக்கமாயருக்கமாய் மகிழ்வுமாகிப்*
*எண்திசைக்கும் எல்லையாகிப் பரப்பாகிப் பரலோகந் தானேயாகிப்*
*பூவலோக சுவலோகமாய்ப் பூதங்களாய்ப் புராணன் தானேயாகி*
*ஏவெல்லாம் ஏல்விப்பானாய் எழும் சுடராய் எம்மடிகள் நின்றவாறே.*

## மங்களஸ்நானம் அங்குரார்ப்பணம் முளைப்பாலிகை கங்கண பூஜை

(அப்பர்)

*பாரவன்காண் பாரதனில் பயிரானான்காண்*
*பயிர்வளர்க்கும் துளியவன்காண் துளியில் நின்ற*
*நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித்தான்காண்*
*நிலவேந்தர் பரிசாக நினைவுற்று ஓங்கும்*
*பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப்பன்றி*
*பிரியாது பலநாளும் வழிப்பட்டேத்துஞ்*
*சீரவன்காண் சீருடைய தேவர்க்கெல்லாம்*
*சிவன் அவன்காண் சிவபுரத்துதெஞ் செல்வந்தானே.*

## தீப பூஜை

(அப்பர்)

*இல்லக விளக்கது இருள்கெடுப்பது*
*சொல்லக விளக்கது ஜோதியுள்ளது*
*பல்லக விளக்கது பலருங்காண்பது*
*நல்லக விளக்கது நமச்சிவாயவே.*

## சிவசக்தி கும்ப பூஜை

(சம்பந்தர்)

*நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு*
*ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்*
*சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்*
*குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே.*

## ஹோமம்

(அப்பர்)

*ச ஒலியெலாம் ஆனாய் நீயே உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே*
*மலரெலாம் ஆனாய் நீயே மலையான் மருகனாய் நின்றாய் நீயே*
*சப்பெரிதும் இனியாய் நீயே பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே*
*விளக்கெலாம் ஆனாய் நீயே திருவையா றகலாத செம்பொற்சோதி.*

## பெண் அம்சம்

**மங்களஸ்நானம், திருவாதிரை சுற்றுதல் மணப்போங்கல், விநாயகர் பூஜை முதலியன**

## பிள்ளை வருதல்

(சுந்தரர்)

சாரணன்தந்தை யென்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணியென்று
பேரெணாயிரங்கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் றொழுங்கறை யூரிற்பாண்டிக்கொடுமுடி
காரணாவுனை நான்மறக்கினுஞ் சொலலுநா நமச்சிவாயவே.

கோணியபிறை சூடியைக் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
பேணியப் பெருமானைப் பிஞ்சக பித்தனைப் பிறப்பிலியை
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனைப்படப் பாம்பறை
நாணனைத் தொண்டனூரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லை துன்பமே.

## மாப்பிள்ளை அலங்காரம் ஆசி

(சுந்தரர்)

பொன்னுமெய்ப் பொருளும் தருவானைப் போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்னதன்மையன் என்று அறிவொண்ணா எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணி ஆரூரானை மறக்கலு மாமே?

## மணமகள் வருதல் அலங்காரம் ஆசி (பொன்னும்)

(ஆண்டாள்)

வாரணமாயிரம் சூழவலஞ்செய்து
நாரணநம்பி நடக்கின்றானென்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப்புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்

நாளைவதுவை மணமென்று நாளிட்டு
பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் ஓர்
காளைக்புகுதக் கனாக்கண்டேன் தோழி நான்

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை
சுந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழி நான்

குங்கும மப்பிக் குளிர் சாந்த மட்டித்து
மங்கலவீதி வலஞ்செய்து மணநீர்
அங்கு அவனோடும் உடன் சென்று அங்கு ஆனைமேல்
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழி நான்

ஆயனுக்காகத்தான் கண்டகனாவினை
வேயர்புகழ் வில்லிபுதூர்க் கோன் கோதை சொல்
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே.

**பிள்ளை வருதல் :** பாதபூஜை நாந்திசெய்தல், கங்கணம் அணிதல் விநாயகர் தரிசனம் போய்வருதல் (வரும்போது) பாலால் கழுவி பட்டால் துடைத்து மிஞ்சி போடுதல்.

**ர வருதல் :** பாதபூஜை நாந்திசெய்தல் கங்கணம் அணிதல் விநாயகர் தரிசனம் மணவறையில் (மாப்பிள்ளையுடன்) அமர்தல்

## சங்கல்ப்பம் நவக்கிரகபூஜை

(சம்பந்தர்)

று தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணை தடவி
ய திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமேபுகுந்தஅதனால்
று திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

## சம்பந்தி உபசாரம் வழங்குதல்

## நாந்தி விளக்கேற்றல் மணப்பெண்ணுக்கு கனி கொடுத்தல்

சங்கற்பம் குல கோத்ர பூர்வ கன்னிகாதானம்

## தாரை வார்த்தல்

(சேக்கிழார்)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினோடு
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி வுலகெலாம்

## (திருமாங்கல்யதாரணம்)

## மாங்கலிய பூஷண சம்பாத ஹோமம் மங்களாஷ்டகம்

(சம்பந்தர்)

மண்ணி நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணிநல் லஃது றுங் கழுமல வளநகர்ப்
பெண்ணி நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

(மாணிக்கவாசகர்)

சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே அடியே னாதரித் தழைத்தால் அதெந்துவே யென்றருளாயே.

## விவாக தம்பதிக்கு ஆசீர்வாதம் முதியோர்கள் அக்ஷதை கொடுத்தல்
## தேவதா பிரசாதம் கொடுத்தல்
## திருமாங்கலியரக்ஷோர்த்தம்
## விபூதி குங்குமம் இடுதல் (சம்பந்தர்)

*மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு*
*சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு*
*செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் றிரு நீறே*

## அம்மான்பட்டம் நாத்தி பிறை

*மாலை மாற்றுதல் } பொரியிடல் } ஹோம*
*கை கோர்வை } பிரதக்ஷணம் } ரக்ஷை வைத்தல்*

### (அப்பர்)

*பார்த்திருந்தடியனே னுன் பரவுவன் பாடியாடி*
*மூர்த்தியே யென்பனுன்னை மூவரில் முதல்வன் என்பன்*
*ஏத்துவாரிடர்கள் தீர்ப்பாய் தில்லைச் சிற்றம்பலத்துக்*
*கூத்தா வுன் கூத்துக்காண்பான் கூட நான் வந்தவாறே.*

## அம்மி மிதித்து, அருந்ததி பார்த்தல்

*நவக்கிரகதேவதாபிரீதி (வேயுறு தோளிபங்கன்)*
*மைத்துனர் மரியாதை மோதிரம் அணிதல்*

## மணமக்களுக்கு வாழ்த்து பத்திரம்

*பெரியோர்களால் நல்ஆசி மொழிகள்*

### (சம்பந்தர்)

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னைநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கண்
மன்னு காவிரி சூழ்திருவலஞ் சுழிவாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்திதம்பாடியும் வழிபடுமதனாலே.

### (சம்பந்தர்)

*சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்*
*முறையாலே யுணத்தருவேன் மொய்பவளத் தொடுதரளந்*
*துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்*
*பிறையாளன் றிருநாமமெனக் கொருகாற் பேசாயே.*

### (மாணிக்கவாசகர்)

*குறைவிலா நிறைவே கோதிலா அமுதே ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே*
*மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென் மனத்திடை மன்னிய மன்னே*
*சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந் துறையுறை சிவனே*
*இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய் இனியுன்னை யென்னிரக் கேனே*

### (பல்லாண்டு)

*குழலொலி யாழ்வொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி*
*விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகு திரு ஆரூரின்*

[illegible] விநாயகனை மனம் செய் [illegible]
[illegible] கூடி யம்மா [illegible] பல்லாண்டு கூறுதுமே.

(சேக்கிழார்)

[illegible]காலத்தின் பழுதிலாத்திறனும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்
[illegible] எழுந்தருளப்பெற்ற பேரிதனால் எற்றைக்கும் திருவருளுடையோம்
[illegible] னெறியில் அழுந்திய [illegible] நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
[illegible]கொள் திருநீற் றொளியினி விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்பார்

(அபிராமி அந்தாதி)

தனந்தரும் கல்விதரு மொருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாம் தருமனப ரென்பவர்க்கே
கனம் தரும்பூங் குழலாளபிராமி கடைக் கண்களே.

(மாணிக்கவாசகர்)

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாதோ ரின்பநம் பாலதாகக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

## நல்வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க-செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெல்லாம்.

## சந்தனம் புஷ்பம் சபாதாம்பூலம் வழங்கல்

(அப்பா)

பெண்ணவனை யாணவனைப் பேடானைப்
பிறப்பிலியை யிறப்பிலியைப் பேராவாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலானை
வேதியனை வேதத்தின் கீதம்பாடும்
பண்ணவனைப் பண்ணில் வருபயனானைப்
பாரவனைப் பாரில் வாழுயிர்கட் கெல்லாங்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே.

உஜ்ஜீவித்தாள்வாய் சிவமே.

அன்பே சிவம் — நன்றியே ஆனந்தம்

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்

குருபாதந் துணை

# ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு

## காப்பு

நற்குருகா ருங்கமலை ஞானசம் பந்தனெனுஞ்
சற்குருவைத் தாலாட்டத் தந்திமுகன் றந்தருள்வாய்

## நூல்

கமலைவாழ் ஞானப்ர காசனரு ளால்யானும்
விமலமுறக் கூடலிலே மிக்குதயஞ் செய்தானே ௧
பொய்கண்ட சந்தானம் பொய்யாக வேவெண்ணெய்
மெய்கண்ட சந்தான மேதினியில் வந்தானே ௨
கங்கை யிளம்பிறையுங் கண்ணனலு மான்மழுவு
மங்கை யிடமு மறைத்துலகில்வந் தானே ௩
திருஞான சம்பந்த தேசிகனு மிங்கென்பாற்
கருஞான சம்பந்தக் கட்டறுக்க வந்தானே ௪
பாலாட்டும் பொன்முடிமேற் பாம்பாட்டல் போற்சிறியேன்
றாலாட்டுந் தன்செவியிற் சாத்துந் தயாபரனே ௫
நாத மிடியாக நல்லவிந்து மின்னாகப்
போத மழையாகப் பொழியின்ப பூரணனே ௬
வான்போ னிறைந்த வடிவிலதாய் நிர்க்குணமாய்த்
தேன்போற் பொழிந்தறிவிற் றித்திக்குந் தேசிகனே ௭
முப்பாழி னுள்ளே முளைத்தெழுந்த முச்சுடரா
யப்பாழ் விளைவி னகண்டமரு மாரியனே ௮
ஆன சிதானந்த வகண்டபரி பூரணத்தை
மோன மொழியாலே மொழிந்தருள வந்தானே ௯
வேதா கமத்தின் விளைவாய் விளைந்தவருட்
போதானந் தப்பொருளைப் போதிக்கும் போதகனே ௧௰
காட்டத்தி லங்கியெனக் கட்டுருவிற் காட்டியென
நாட்டத் திரவியென நல்லுதயஞ் செய்தானே ௧௧

அத்துவா மேனியனே வல்லாத பேரொளியோ
நத்துவாழ் செங்கரத்த னாடற் கரியானே கஉ
சொற்பிரமா ணாதிகளாற் றோன்றாச் சுகவடிவைச்
சிற்பிரமா ணத்தில்வைக்குந் தேசிக சிந்தாமணியோ கங
தேடிருவர் காணாத செந்தாமரை சிவப்ப
நாடிருளிற் றூது நடந்துவரு நாயகமோ கச
உபயகரங் காட்டியழு தோலமிட்டு நிற்போருக்
கபயகரங் காட்டி யருளுமரு ளாகரனே கரு
பொய்கை வளநாடும் பொன்னி வளநாடும்
வைகை வளநாடும் வாழ மகிழ்ந்தானே கசு
ஆட லிருந்திசையு மாரூரு மன்பருள்ளுங்
கூடல் வளம்பதியுங் கோயிலெனக் கொண்டானே கஎ
மெய்யன்ப ரெல்லாம் வியன்கருணை பாராட்டப்
பொய்யன்பனேனைப் பொருட்படுத்தும் போதகனே கஅ
விண்முகத்தி னாலே விளங்கு கதிர்மதிபோற்
சண்முகத்தி னாலே தயங்குந் தனிச்சுடரோ கக
சைவமணம் வீசுபுகழ்ச் சம்பந்த ரன்பருள்ளே
தெய்வமணம் வீசுஞ் சிதானந்த சீதளமோ உ
கல்லாமற் கற்றிடநான் காணாத காட்சிதனைச்
சொல்லாமற் சொல்லுமொரு தூயதிரு வாசகனே உ
நேரா மடியரிடு நேசப் பயிர்விளைவிற்
பேராமற் பாயும் பெருங்கருணைப் பேராறே உ
தீராமற் றீரத் திரிமலமு மோர்நொடியிற்
பாராமற் பார்க்குமருட் பார்வை படைத்தானே உ
ஒன்றிரண்டு மூன்றுநா லுற்றவுபாயத்திறத்தாற்
றொன்றுதொட்டு வந்தவினைத் தொத்துந் துடைப்பானே உ
ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தித்திக்குந் தேசிகனே உ
தங்காதல் கொண்ட தமியே னுளங்குளிரச்
சிங்கா தனத்திற் சிறந்திருக்குந் தேசிகனே உ
மாணாப் பவத்துயர மாற்றி மறித்துலகங்
காணாம லென்றலையிற் கைத்தலத்தை வைத்தானே உ

தெய்வத் திருநீறுஞ் செஞ்சந் தனக்காப்புஞ்
சைவமணித் தாழ்வடமுஞ் சாத்தும் புயாசலனே ௨௮
சேர்தர்க்க வாதமொடு தெக்கண சித்தாந்தமெல்லாம்
போதிக்க வந்தவருட் போதனு மென்பாயோ ௨௯
சினவரவ நீத்தனையான் றென்கூடற் சம்பந்த
னனவரதஞ் சாற்றிவிளை யாடவா வம்புலியே ௩௦
சகளங்கம் போக்குமுனைத் தன்சோதி யாக்கிவிடு
மகளங்க் தேசனுட னாடவா வம்புலியே ௩௧
செத்துப் பிறப்பவரைத் தெய்வமெனத் தேறாதென்
கொத்தடிமை கொண்ட குருபரனைச் சொன்னாரார் ௩௨
ஓரொளியைக் காட்டி யொளிக்குமொளி காட்டியங்கே
சீரொளியுங் காட்டவல்ல சித்தர்தமைச் சொன்னாரார் ௩௩
ஊடுகினுங் கூடுகினு மொக்கவெதி ராடுகினுங்
கூட விளையாடுங் கோமானைச் சொன்னவரார் ௩௪
அறுபத்தைந் தாம்விளை யாட் டாக வருளாலென்
கெறுபத்தை யுங்கெடுத்த கேடிலியைச் சொன்னவரார் ௩௫
உள்ளந் தனையுருக்கி யொப்பிலா வானந்த
வெள்ளந் தனைப்பெருக்கும் வேந்தரே கண்வளரீர் ௩௬
ஊனவிழி யிங்கே யுறங்கவுறங் காதவொரு
ஞானவிழி தந்தகுரு நாதரே கண்வளரீர் ௩௭
நாயே னுனதடிக்கீழ் நாடோறுங் கண்வளரத்
தாயே யெனையாண்ட சற்குருவே கண்வளரீர் ௩௮
காரணத்தால் வந்த கருணைச் சம்பந்தனுடன்
பூரணியுங் கூடப் புழுகணைமேற் கண்வளரீர் ௩௯
எந்தைகுரு தாலாட் டிருபத்தோ டிருபதுவுஞ்
சந்ததமுங் கற்றுணர்வோர் சந்ததமும் வாழியரே ௪௦

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு

முற்றிற்று

குருபாதந்துணை

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

குருபாதந்துணை

# ஸ்ரீமத் ஞானசம்பந்ததேசிகர் திருப்பள்ளியெழுச்சி

## காப்பு

ஞானசம் பந்தகுரு வைப்பளி யுணர்த்தலருள்
நாமறியு மாறுபுகல்வான்
ஆனைமுக னைக்குகனை யக்குருவை யொக்கவரு
ளானடி வழுத்திமகிழ்வாம்

## நூல்

வேதாந்த வேதகா போதாந்த போதகா
மிக்கசித் தாந்தவிகிர்தா
நாதாந்த நாயகா ஞானசம் பந்தகுரு
நாதனே பள்ளியுணராய் ௧

பார்சகல துன்பமொழி யப்பளி புரும்பரம
காரணனே பள்ளியுணராய்
சீர்பரை யெனும்பரம காரணி யுடன்றருமை
தேசிகனே பள்ளியுணராய் ௨

விண்ணரசு மண்ணரசு மிக்கதிசை யோரரசும்
வேதமுத லோதியுணர்வான்
நண்ணுபுக ழெண்ணரிய ஞானசம் பந்தகுரு
நாதனே பள்ளியுணராய் ௩

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதந்துணை

# ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை

## காப்பு

திருமருவு மருமலர்க டுன்னிவரு பொன்னிசூழ்
சென்னிவளநாடு நாளுந்
திகழ்தரு தலைப்பேறு முன்னின்ற தென்னவளர்
தென்னன்மதுரா புரியினின்
றருளுருவு கொண்டருளி வந்தசற் குருராய
னடியவர்க் கெளியகோமா
னவனிபுகழ் திருஞான சம்பந்த னெங்கைக்
கருட்சமுக மாலைபாடக்
கருமைமத நதிபெருகு மிருகவுட் கரிமுகக்
கடவுள்கட லோலமிடவுங்
கனகமணி மகுடதட முடியவுணர் முடியவுங்
கதிர்வேல்விடுத்த திறல்சேர்
முருகனது முன்னர்வரு பொன்னனைய செம்மேனி
முதல்வனுமை புதல்வனிருதாண்
முண்டகமு மெம்மிதய முண்டகமு மொன்றென
முயங்குற நினைந்திடுதுமே

## நூல்

வேதாவு மாலுமறி தற்கரிய மூர்த்தியா
மெத்திய சிவானுபவமே
மேற்கொண்டு சிறிதுமிப் புவிவாழ் வெனும்பொய்யை
மெய்யென மயங்குறாதே
நாதாதி பாசங் கழன்றுவாழ் சல்லாப
நல்லோர்கள் சங்கமொருபாள்

நவிலுமொழி குழறநய னங்கள்புன லேசொரிய
நங்கள்குறை தீரென்றுநின்
றோதா வுளங்கரைந் தலறிக் கிடந்துருண்
டோலமிடு மன்பரொருபா
லொருவருக் கொருவரடி மைத்திற முறைத்துரைத்
துருகுமடி யவர்களொருபால்
சாதார் பணிக்குழைய ஞானரின் ஞானப்ர
காசன் றருந்தருமெழிற்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே

நம்போல வெல்லவரு மானந்த மானதோர்
நன்மைதனை யிம்மைதனிலே
நண்ணிடுவ தென்றென் றிரங்கும் பெருங்கருணை
நாடுங் குழாங்களொருபா
லம்போ ருகத்துநனி தத்துமளி மெத்துமித
மாடவரு பீடமேல்வா
ழயனார் தமக்குயா மென்கொலோ கைம்மா
றளிப்பதெனு மன்பரொருபால்
வெம்போ ரிடுங்கணை நெடுங்கண்மட மங்கையர்கள்
வெங்களப கொங்கை மிசையே
வீழ்வுறினு மெந்தவகை வாழ்வுறினு மந்தவகை
வேறுபடு மன்பரொருபால்
சம்போல் வெளுத்துள பளிக்குநெடு மாடமேற்
கவினுடுக் குமிழிபுரையுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே

உற்றபேர் யாவர்களு மொல்லைதனி லுத்தமர்க
ளுத்தூளி தப்பூதிவீ
சொளித்தேசி னூடே யொளித்தே யவர்க்குடலம
யுருவமென வுருவமதனைப்

பெற்றவரை நண்ணுமவர் மேலுமவர் போலுமப்
பெற்றிமை தரிப்பவொருபாற்
பின்னுவார் சடிலமொடு துன்னுவா ராகிநிறை
பெரியோரினங்க ளொருபால்
செற்றமுத லானபகை செற்றநெறி மாதவர்கள்
செற்றவெதிர் வார்விழிகளுஞ்
சிந்தையு மிகக்குளிர வந்தருளு மமுதமிகு
தெய்வீக ஞானகுரவன்
கற்றவர் சினத்தரு வனத்தையு மலைக்குமொரு
காலான கவிதையாளன்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணைகரன் சமுகமே கூ

உலகுதொழு புகலிவரு குரிசிலுஞ் சிலைமீதி
லுததியின் மிதந்தவரசு
மொருமுதலை முதலைசிறு மதலைதா வருளென்
றுரைத்தமி ழுரைத்தகோவும்
அலகில்புகழ் வாதவூர் வேதியனு மோதியவை
யாதிதிகழோதை யொருபா
லடியவர் தனித்தனி தனைப்புகழ் சிறப்புள
வருட்கவி முழக்கமொருபால்
சலதிநிகர் படையரசர் கனகமணி முடிகளுந்
தவமுனிவர் சடைமுடிகளுந்
தடவச் சிவந்துமிளிர் தாளாளன் முத்திநெறி
தந்தருள வந்தகுரவன்
கலசமுலை யரிவையர்க ளுருவையெதிர் கண்டிளைஞர்
கண்மறுகு மறுகுபுடைசூழ்
கமலாபுரந்தங்கி வருஞான சம்பந்த
கருணைகரன் சமுகமே

உலகிலுறு மலகில்பல கலைகளு மிகக்கூர்மை
யுள்ளமுள் ளாராகியிங்

குந்துபல சமயங்கள் வந்தடி பணிந்திட
வுரைக்குமுறை யோர்களொருபால்
இலகுசதுர் விதமருவு கவிதைமழை கடிதே
யெதிர்ந்தவர் பயந்தோடுமா
றினிதினரு ளடியவர்கள் பொழியவுயர் புலவர்மிக
விச்சித்து நிற்பரொருபால்
பலவினறு பலமினிய பலமுதவு மதுநதி
பரந்திரைந் தோடியயலே
பழனத் துலாவிவரு புதுநத் தமிழ்ந்தநனி
பாய்கின்ற வளமைவளமுங்
கலபமயி னடனமிடு பொழில்களும் பொழில்கள்சூழ்
காவிவா வியுமேவிடுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணைகரன் சமுகமே ௫

தங்குரவன் மேன்மையே மேன்மையா நூல்சொன்ன
தன்மையே நன்மைநெறியார்
தங்களை விளித்திருள் கெடுத்தருள் கொடுத்துவளர்
சதுரினு னுடொறுமுணர்ந்
தெங்குர வனைப்போல ஞாலத் தருட்குரவ
ரில்லையினி வல்லையவனு
லெல்லயரு முய்திரெனின் முகமனென் பார்கொலோ
யென்றுமெலி வார்களொருபால்
பொங்குபுக ழன்னவனை நன்மைசிறி தில்லாத
புல்லரேனும் புகழிலெப்
போதகந் தன்னிலப் போதக னெனக்கொண்டு
புகழாம லிகழ்வார்களார்
கங்கைமதி பொதிகின்ற சடையானை யுறழினுங்
கடையாய் நினைப்பரொருபாற்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணைகரன் சமுகமே ௬

ஒருவர்பா லொருவர்புதி தாகமிகு தாகமுடை
னேதுநூ லோதையொருபா
லோதியது தன்னையது பின்னையொரு வர்க்கொருவ
ருரைசெய்யு மாவமொருபால்
அருவரா தென்கொலோ மின்கொலோ வென்னுமிடை
யரிவையர்கள் கலவிநலமென்
றவமே விழுந்துசிலர் கெடுகின்ற வாறென்
றழுங்குமடி யார்களொருபான்
முருகுதெரி தமிழின்வழி மதுவொழுக முகையவிழ
முளரிமேல் விளரிபாடு
மொய்யளி யுலாவுந் தடங்களு நெடுங்ககன
முகடுதொடு கனகமதிலுங்
கருமைசேர் பொழில்களுங் கடைசியர்க டுழனிவளர்
கழனியுங் கஞுலும்வளமைக்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே எ

ஈதேய லாதுகதி யொன்றுமினி யின்றென்
றிருந்தநிலை யோர்களிறையோ
னின்னதே முத்தியென முன்னமே சொன்னநெறி
யின்னதனி னில்லையதனுன்
மீதேயு முண்டென்று மண்டுபுரி நல்வினை
வெளிப்பட நினைந்துகடிதே
மேவியிங் கருளான வழிகண்டு* கலிகால
மெலிவுபெறு வார்களொருபால்
ஏதேது வந்திடினு மெந்தையரு ளல்லதொன்
றில்லையென வெண்ணியெண்ணி
யென்போ லிகட்குமிகு மன்போ டறிந்திட
விசைக்குமடி யார்களொருபால்
காதேவ தேவவென் றண்டர்தொழ விடமுண்ட
கண்டத் திருட்காந்தே

* கலிகால—கெடுதிநீங்கும்படி

கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே அ

எந்நாளு மின்னறரு மிவ்வாழ்வு பொய்வாழ்
வெனும்பரி சறிந்திடாமே
யிறந்தும் பிறந்துந் திரிந்தோ மெலிந்தோ
மெமக்கான காலமிதுவென்
றன்று விருந்தவர்க ளன்று விருந்தவர்க
ளொன்றுரெனும் படிநினைந்
தோடிவந் தார்களைத் தேடிவந் தேசுற்ற
மூடலிடுகின்ற தொருபால்
இந்நாளி னன்னெறிகண் முன்று ளியற்றினோ
மிந்நாளி னளிகோரத்
தினவாளை தத்துமது ராபுரிக் கடவுள்வந்
தெமையாள வென்பரொருபால்
கைந்நாக மதகரட வருவியொடு புரளமுன்
கடிதினுரி கொண்டதிறலோன்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே கூ

இறைவனை யருச்சனை புரிந்தே திரிந்துருகி
யிருகணீர் சொரியவெரிசே
ரிழுதுபெற வழுதுநனி தொழுதுடல மென்றுபோ
மென்றுமெலி வார்களொருபால்
முறைமைநெறி தவறாத மாதவர்க ளாதலான்
மூதறிவுகொண்ட வருள்சேர்
முதியவர்க ளென்னுமிவ ரதிகரென விளையார்கண்
முன்பணியு மன்பரொருபால்
துறைமுழுது நிறைதவள நித்திலப் பத்திவிடு
சோதியைச் சோதியாமற்
றுன்னுபுன லென்றுநனி பேதையர்க ளோடித்
துளைந்துவிளை யாடலெய்தக்

கறைவிரவு வேணயன நாரியர்க ணித்திலக்
கதிரென வுணர்த்தநா ளுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருகணாரன் சமுகமே கo

அற்றமறு முண்மையி னுரைத்தசொ ல்லைத்திலையு
மயலா ரிடத்துமுனமே
யறிந்தவர்க ளாகிச் செறிந்தனர்கொ லோவல்ல
தவனடிக் கடிமையாகிப்
பெற்றனர்கொ லோவலது சிலரிடைச் சிலர்பெற்ற
பெற்றியுடை யோராகியோ
பின்னரிவர் முன்னரிவர் பெற்றனர்கொ லோவென்று
பேசுசங்கையர்க ளொருபால்
நெற்றிவிழி யுஞ்சடைத் தலையினி லடங்கியிடு
நெடியநதி பிறைமதியமு
நீலகந் தரமுங் கரந்துநர ருருவாய
நிமலனிவ னிவனையடையக்
கற்றவர்க ளாகிப் பிறந்தவெல் லோர்களுங்
கருத்தினின் முயற்சிபெறுவார்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே கக

மறைவாழி மறைசொன்ன நெறிவாழி நெறிநின்ற
மன்னவர்கண் மன்னிவாழி
வாழியே யனையவரும் பாவமிகு பரசமய
வன்படை துரந்தசைவத்
துறைவாழி துறைதோறுந் தாளமெறி மறிதிரைந
டுன்னுபல மலர்வாவிசூழ்
தொன்மதுரை மாநகர் நன்மைபெற வாழிநற்
றொண்டர்க டழைத்துவாழு
முறைவாழி முறையிட்டு மாயன்முதல் விண்ணவர்
முகங்கருகி வேர்வாடவே

முன்னோடி யணைவார்கள் பின்னோடி யடலோடு
முடுகித் துரந்தகஞ்சக்
கறைவாழ் கருங்கண்ட னுமையோடு மினிதுவாழ்
கமலைநகர் வாழிவாழி
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை
முற்றிற்று

குருபாதந்துணை

திருச்சிற்றம்பலம்.

[illegible] நாலுவழி யானவர்செ யோகமுத
லானமனு நீதிபுரிவான்
சாதிகுல மேனிசம யம்புகல வந்தவொரு
சற்குருவே பள்ளியுணராய் ௪

அநாதியச ராசரமு மானவுயிர் யாவைகளு
மனாதியுண வுண்ணமுயல்வா
னனாதியரு ளானதென் னாலவாய் வாழவரு
மற்புதனே பள்ளியுணராய் ௫

பத்திசெயு மன்பரும் பாவனா தீதரும்
பாடுவோ ராடுவோரும்
புத்தியொடு முத்திபுகு வான்றருமை வாழவரு
போதகனே பள்ளியுணராய் ௬

*ஓராறு சமயமு மோராறு சமயமு
மோரா றெழுத்து முயல்வா
னோராறு சென்னியி லொளித்துவந் திடுந்தேசி
கோத்தமா பள்ளியுணராய் ௭

நற்கமலை யாதியெனு ஞானப்ர காசனருள்
ஞானசம் பந்தகுருவே
கற்றவுன தன்படியர் மிக்கவரு ளுடைகரு
ணாகரா பள்ளியுணராய் ௮

ஆனவுயிர் மூவகையு ளானபரி பாகவித
மானவித் தீக்கைபுரிவா
னானவரு ளேவடிவ மானகுரு வேயகில
மானவா பள்ளியுணராய் ௯

* ஓராறு சமயமும் ஓராறு சமயமும்—அறுவிதச் சமயத் தோறும் ஆறுகாலங்களிலும்.

அண்டருங் கொண்டரு மானமுனி வர்களு
டத்துவித முத்தியறிவான்
றண்டமிழ்சொற் றென்றருமை ஞானசம் பந்தனுஞ்
சற்குருவே பள்ளியுணராய்

வாழ்கமறை யந்தணர்கள் வானமரர் நீதியுற
வாழ்கவரு ளாகமமெலாம்
வாழ்கதிரு நீறுசிவ மந்திரமொ டுந்தருமை
வாழ்கவே பள்ளியுணராய் கக

ஸ்ரீமத் ஞானசம்பர்த தேசிகர் திருப்பள்ளியெழுச்சி

முற்றிற்று

குருபாதந்துணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரியர் திருவடிவாழ்க

சுபம்.

உ

# மாணிக்கவாசகர்காலவாராய்ச்சி*

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா—யன்பமைத்துச
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து. —திருவாசகம்.

செந்தமிழ்ச்செல்வம் செவ்வனேபொருந்திய சீரியர்காள்! ஆதிசீர் பரவும் வேதியனுகிய வாதவூரண்ணல்மலர்வாய்ப்பிறந்த திருவாசகத்தின் தீஞ்சுவைப்பெருக்கும, அருளும்,உருக்கமுமறியார்யாரே! சிவப்பிரகாசமுனிவர்.

"திருவாசகமிங்கொருகாலோதிற்
கருங்கன்மனமுங்கரைந்துகக்கண்கள்
தொடுமணற்கேணியிற்சுரந்துநீர்பாய
மெயமயிர்பொடிப்பவிதிர்விதிர்ப்பெய்தி
யன்பாலுருகுனரன்றி
மனபதையுலகில்மற்றையரிலரே" என்றும், திருவருட்பாப்பாடிய இராமலிங்கசுவாமிகள,—

"வான்கலந்தமாணிககவாசகநின்வாசகத்தை
நான்கலந்துபாடுங்கானற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்
ஊன்கலந்துவுயிர்கலந்துவுவட்டாமலினிப்பதுவே."

என்றும், அடங்காவியப்புடன் திருவாசகத்தைப் புகழ்ந்தேத்தினராயின் என்போலியர் அவ்வருள்நூலினருமையைத் துதித்தலும் அடாமையன்றோ! மாணிக்கவாசகரின் அருள்நிறைந்த திருவாக்கு மன்னுயிருய்யவித் தென்னுடதனில் தொன்றுதொட்டுக் கருங்கன்

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

மனமுங்கரைந்திடக்கானஞ்செய்துவருமகிமைபெற்றதென்பது பண்டிதர்களும், பாமரர்களும் ஒப்பும் விஷயம். ஆனால் வாதவூரடிகள் ஆதிநாதனை நினைந்தோதியவாசகம் இற்றைக்கு இவ்வளவு காலத்திற்குமுன் அவ்வடிகளது திருவாயினின்று தெள்ளமுதின்பிரவாகம் போற் பெருகியதென்று ஐயமறக்கூறுவாரின்னுங்கண்டிலம். இச்சிவஞானசெல்வர்காலம் ஓர் பெரியதர்க்கவிஷயமாகவேமுடிந்திருக்கின்றது. இன்னவர் காலத்தை வரையறுக்கப்புகுந்த வித்வசிகாமணிகள் பலரே. ஆனாலொவ்வொருவர்கொள்கையும் ஏனையோர் கருத்திற்கு வேறுபட்டு அவர் தம்முள் மாறுபட்டாராயிருத்தல் தமிழ்நாட்டுப் புராதனசரித்திர வாராய்ச்சியின்பாலுழைப்போர் யாவர்க்கும் திகைப்பைவிளைவிக்கும். கிருஸ்துபிறப்பதற்குமுன் முதல் நூற்றாண்டினிடைப்பட்டகாலமுதல் கிறிஸ்துபிறந்து 14-வது நூற்றாண்டுவரை மாணிக்கவாசகரின்காலத்தை முன்னும் பின்னும் அவரவர்களின் யுக்திக்கிணங்கச் சரித்திரவாராய்ச்சி செய்யப்புகுந்தார் தள்ளிவருகின்றார்களாகையால் அவர்களின் அபிப்பிராயங்களுள் தழுவுவனதழீஇத் தவிர்வனதவிர்தல் முறையாதல்பற்றி அவையீண்டுச்சற்றாலோசிக்கற்பாலன.

இதுகாறும் மாணிக்கவாசகரின் காலநிர்ணயஞ்செய்ய வெத்தனித்தவர்களிற் சிலர்கொள்கைகள் காலவரையறையைப்பற்றிப் பின்வருமாறுள்ளன:—ஸ்ரீமான் S. A. திருமலைக்கொழுந்துபிள்ளையவர்கள் கி. பி. முதல் நூற்றாண்டென்றும், ஸ்ரீமான் பொன்னம்பலம்பிள்ளையவர்கள் இரண்டு, அல்லது மூன்றாவது நூற்றாண்டென்றும், ஸ்வாமி வேதாசலம் கி. பி. மூன்றாவது நூற்றாண்டென்றும், Mr. Wilson கி. பி. 7வது நூற்றாண்டென்றும், போப்பையரவர்கள் 7, 8 அல்லது 9-வது நூற்றாண்டென்றும், சென்னை ஹைகோர்ட்டில் நியாயாதிபதியாய் முன்னிருந்த Mr. Innes கி. பி. 9-வது நூற்றாண்டென்றும், பாரிஸ்நகரவாஸீ திராவிடவித்வான் Professor Julien Vinson கி.பி. 9-வது அல்லது 10-வது நூற்றாண்டென்றும், Rev. Mr. Goudie கி. பி. 8-வது நூற்றாண்டினிடைப்பட்டகாலமுதல் 10வது நூற்றாண்டினிடைப்பட்டகாலம்வரைஎன்றும், ஸ்ரீமான். கோபிநாதராயரவர்கள் கி.பி. 10-வது நூற்றாண்டின்முடிவு அல்லது 11-வது நூற்றாண்டி

ஞாதியென்றும், சர்வவிஷயக்களஞ்சியமென்றுசொல்லத்தக்க Encyclopaedia Britannica என்ற பிரபலநூலில் தமிழைப்பற்றி எழுதியிருக்கும் Dr. Rost. கி. பி. 13 அல்லது 14-வது நூற்றாண்டென்றும் மாணிக்கவாசகஸ்வாமிகளுக்குக்காலங் குறிப்பிட்டு எழுதியிருக்கின்றார்கள். Mr. Nelson தாமெழுதிய Madura Manual என்றபுத்தகத்தில் மாணிக்கவாசகர் கி. பி. 819-வதுவருஷத்தில் பௌத்தசமயத்தாரோடு வாதாட இலங்கைக்குப்போனதாக மிகத்திட்டமாகச்சொல்லுகிறார். நானும் "ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன் பெனுநறவமாந்தி, மூங்கையான் பேசலுற்றானென்ன யான்மொழியலுற்றேன்" என் றான்றோர்கூறியதற் கிலக்காயமாக, இத்தகையபிரபல வித்வான்கள் ஆராய்ச்சிசெய்ய எடுத்த இப் பெரும்விஷயத்தில் என் சிற்றறிவிற்கேற்கச் சொற்பமுழைத்து வாதவூரடிகள் கி. பி. நான்காவது நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லரென்றும், ஒருவேளை 3-வது நூற்றாண்டி லிருந்திருக்கக்கூடுமென்றும் துணிந்துள்ளேன்.

நவீன சரிதவாராய்ச்சிமுறைமைகளைக் கைக்கொண்டு இச்சைவ சமயாசாரியரின்காலத்தை இன்னதென நிர்ணயிக்கப்புகுந்தவர் கொள்கைகள் இவ்வாறாக, நம்நாட்டுப்புராதனக்கொள்கை மேற்கூறிய கருத்துக்களெல்லாவற்றிற்கும் முற்றும் மாறுபட்டதாகும். "இவர்காலம் நாலாயிரம்வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்குதுணியப்படும்" என்று சென்னை ஸ்ரீமான்-பி. இராமநாதனவர்கள் தாமியற்றிய "The 20th Century Tamil Dictionary" என்ற அருமையான தமிழ்ப்பெயரகராதியில் வரைந்துள்ளார். எவ்விதமும் வாதவூரடிகள் சங்கப்புலவர்களுக்கு முன்தோன்றியவரென்றே நம் முன்னோர்களின் துணிபு. சங்கப்புலவர்காலம் கிருஸ்தப்தத்திற்கு முற்பட்டதெனப் பலருங்கூறியுள்ளாராகையால், வாதவூரடிகள் குறைந்தபக்ஷம் இன்றைக்கு இரண்டாயிரம்வருஷங்களுக்கு முன் வாழ்ந்துவந்தனரென்று கொள்வது சாலவும் அமையும். அற்றேல் கிருஸ்துபிறப்பதற்குமுன் நிகழ்ந்த முதல்நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லரென்பது அனுமிக்கக்கிடக்கின்றது. இதுவே தமிழ்க்கலைஞர்களின் பெரும்பான்மையோர்கொள்கை. இதனால் இன்னவர்காலம் சற்றும் திட்டமின்றிப் பெருஞ்சந்தேகவிஷயமாகவே யிருத்தல்காணலாம்.

இவரது காலவரையறைகாரணமாகத் தம்முட்கருத்துவேறு பட்டாரனைவரும் இருசாரராகக் கூறுபடுவர்கள். ஒருசாரார் தேவார மோதிய சைவசமயாசாரியர் மூவர்க்கும் பின்தோன்றியவர் மாணிக்க வாசகர் என்றுசாதிப்பர். மற்றொருசாரார் அம்மூவர்க்கும் வெகு காலத்திற்கு முன்தோன்றியவர் இவர் என்று கூறுவர். மூவரில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் கி. பி. 7-வது நூற்றாண்டிலிருந் தனரென்றும், அவரும் அப்பரும் ஏககாலத்தினரென்றும், சுந்தர மூர்த்தி 9-வது நூற்றாண்டி னுதியிலிருந்தாரென்றும் சரித்திர வல்லுநர்கொள்கை. ஆகவே, மாணிக்கவாசகர் மூவர்பின்தோன்றிய வரென்றால் அவர்காலம் 10-வது நூற்றாண்டிற்குமுன்னிருத்தலரிது. இக்கருத்துக்கொண்டவர்களில் ஸ்ரீமான் கோபிநாதராயரவர்களே பிரபல ஆராய்ச்சிசெய்து யுக்திபலவுமெடுத்துரைத்து அவ்வபிப்பிரா யத்தை வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் 13-அல்லது 14-வது நூற்றாண்டே மாணிக்கவாசகர்காலமெனறு வரைந்துள்ள Dr. Rost-ம், 8. 9-அல்லது 10-வது நூற்றாண்டு அவர்காலமென்று வகிக்கும் Dr. Pope ஐயரவர்களும் மாணிக்கவாசகர் தேவாரம் பாடிய மூவர்க்கும் முற்பட்டவரென்றும் ஞானசம்பந்தர் மாணிக்க வாசகர்காலத்திற்கு 150-அல்லது 200-வருஷங்கட்குப் பின்தோன்றி யிருக்கவேண்டுமென்றும் ஸ்திர அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இவ்விருவித்வான்களில் Dr. Rost கூறுங்காலம் முற்றுந்தவறுஎன்ப தற்குச் சற்றும்ஐயமில்லை. அவ்வாறானல், வாதவூரர் ஞானசம்பந்தர் காலத்திற்கு முன்தோன்றினவராதல் எங்ஙனம் பொருந்தும்? அன்றியும், 1118-ல் அரசுகட்டிலேறின விக்கிரமசோழன் மாணிக்க வாசகர் அருளிய திருச்சாழல்ஓத ஏற்பாடுசெய்ததாக வோர் சாஸ னத்தில் வரைந்துள்ளதாய்க் காலஞ்சென்ற வெங்கய்யா அவர்கள் கூறியிருக்கின்றார். ஆதலால் 12-வது நூற்றாண்டினுதியில் மாணிக்க வாசகர் மகத்தான சைவசமயாசாரியராய் மதிக்கப்பட்டாரென்பது திண்ணம். மேலும் நம்பியாண்டார் நம்பிதொகுத்தருளிய திருமுறை களில் 8-வது திருமுறையாகத் திருவாசகம்சேர்க்கப்பெற்றுள்ளது. நம்பியாண்டார்நம்பி 988-ம்வருடம் அரசுரிமைபெற்ற இராஜஇராஜ கோப்பரகேசரிவர்மனல் ஆதரிக்கப்பெற்ற பார்ப்பனநம்பி. ஆகவே மாணிக்கவாசகரை 10-வது நூற்றாண்டிலேயே பெரியதோர் சிவ

ஞானச்செல்வராகக் கொண்டாடினார்கள் என்பது விளங்குகின்றது. அவ்வாறாயின் அவர்காலம் 10-வது நூற்றாண்டு நுதியெனல் ஒரு சிறிதும்பொருந்தாதென்றேசொல்லலாமெனினும், அவர்மூவர்க்கும் முற்பட்டவரென்று துணிவதற்கு இக்காரணம்போதாது. அவர் மூவர்க்கும்பிற்பட்டவரே என்று ஸ்தாபிப்பான் கூறப்படும் சில முக்கிய நியாயங்கள் இவண் ஆராயக்கடவன. அவையாவன:—

(1) சுந்தரமூர்த்திபாடிய திருத்தொண்டத்தொகையினுள்ளே மாணிக்கவாசகர்பெய ரெடுத்தோதப்படாமை.

(2) மூவர்தேவாரத்திலும் இவரைப்பற்றி ஒன்றும் ஓதா திருத்தல்.

(3) மாணிக்கவாசகர்பாடிய திருப்பதிகளாகிய திருப்பெருந் துறையையும், திருஉத்தரகோசமங்கையையும்பற்றி மூவரில் ஒருவரேனும் பதிகம்பாடாதுவிட்டது.

(4) திருவாலவாயின்கண் சிவபெருமான்செய்தருளிய திரு விளையாடல்பலவும் மாணிக்கவாசகர் அறிந்திருக்க அவைகளுள் ஒன்றையேனும் தேவாரப்பதிகங்களிற் காணாமை.

(5) மாணிக்கவாசகர் சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்று வழங்குதல்.

(6) திருக்கோவையாரில் வரகுணனைப்பற்றி மாணிக்கவாசகர் பேசுதல்.

இக்காரணங்களின் வன்மைமென்மைகளைச் சற்றுஉற்றுப்பார்ப் போம்.

மாணிக்கவாசகர்பெயர் திருத்தொண்டத்தொகையு ளோதப் படாமையால் அவர் 9-வது நூற்றாண்டிற்றோன்றிய சுந்தரமூர்த் திக்குப் பிற்பட்டவராகப்பால ரென்கிறார்கள். சாதாரணமான எத்துணையோ சிவனடியார்கள்பெயரும் வரலாறு மடங்கிய திருத் தொண்டத்தொகை பாடிய சுந்தரர் இடையறாச்சிவத்தியானமும் சிவபத்தியு முடையராய் விளங்கிக் கேட்டோரைமனமுருக்கி முத்தி நெறியிற் செலுத்துமியல்பினதாகிய திருவாசகமுந் திருக்கோவை

யாரும் பாடிய சீவன்முத்தராகிய மாணிக்கவாசகர்பெயரு மறிந்தில
ரென்பது பெருந்துணிபேயாகும். அதனால் மாணிக்கவாசகர் சுந்தரர்
காலத்திற்குப் பின்தோன்றியிருக்க வேண்டுமென்பது ஒருதலை
யென்பர் சிலர். ஆனால் திருத்தொண்டத்தொகையில் வாதவூரடிகளைப்
பற்றிக் கூறாதகால் அவர் சுந்தரமூர்த்திக்குப் பின்புதானிருக்க
வேண்டுமென்பது என்ன நியாயம்? தமிழ்ப்பெயரகராதியியற்றிய
ஸ்ரீமான் இராமநாதன் இவ்விடயத்தைப்பற்றி அவ்வகராதியில் பின்
வருமாறு எழுதியிருக்கின்றார். "திருத்தொண்டத்தொகையினுள்ளே
யெடுத்தோதப்படாமையின் மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்திநாயனா
ருக்குப் பிற்பட்டவரெனச் சாதிப்பாருஞ்சிலருளர். அஃதறியாமை
யின்பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்ரபாதர்முதலியோ
ரெல்லாஞ் சிவபத்தியிலுஞ் சிவயோகத்திலும சிறந்த மெய்யடியார்க
ளாகவும் அவரையெல்லாந் திருத்தொண்டத்தொகையினுட் கூறாமை
யாதுகாரணமோ, அதுவே மாணிக்கவாசகரைச் சேர்த்தோதாமைக்
குங் காரணமாம்," இதுநிற்க; சுந்தரர் திருத்தொண்டத்தொண்டத்
தொகையில் "பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்" என்று
கூறியது மாணிக்கவாசகரை உத்தேசித்தே கூறியதென்பது என்
சிற்றறிவிற்குத்தோன்றுகிறது. மாணிக்கவாசகரைப்பொய்யடிமை
யில்லாத புலவரென்றுவருணித்தல்பொருந்தாதென்றுகூற ஒருவருந்
துணியார். 9-வது நூற்றாண்டிற்கு வெகுகாலத்திற்குமுன்னரே
மாணிக்கவாசகரைச் சைவசமயத்தார் மகானெனக்கருதிக் கொண்
டாடிவந்தனராயின் பனைய தொண்டர்களுக்கொப்ப அவரை அவர்
திருநாமத்தால் வெளிப்படையிற்கூறாது சிறப்புவசனத்தாற் செவ்
வனே குறித்துத் திருத்தொண்டத்தொகையில் சுந்தரமூர்த்தி
அவரைப்பாடுதல் பாரம்பரியவழக்கத்திற்கும் பொருத்தமேயாகு
மன்றோ! மணிமேகலையுட் சிறைசெய்காதையில் சாத்தனார் திரு
வள்ளுவரைப் பெயர்கூறாது "பொய்யில்புலவன்" என்று கூறியிருப்
பதும், சாத்தனாரைச் சிலப்பதிகாரம் காட்சிக்காதையில் "நன்னூற்
புலவன்" என்று சிறப்பித்துக் கூறியிருப்பதும் அனைவருமறிவர்.
சிவபெருமானை ஞானாசாரியராக அருளுடன்தோன்றி உபதேசஞ்
செய்து ஆட்கொண்டருளப்பட்டவரும், பாண்டியனா லொறுக்கப்
பட்டு நின்றபோது துயர்பொறுக்கமாட்டாதலறிக் கண்ணீர்

சொறிந்து திருவாசகமோதித் திருப்பெருந்துறையுறை சிவனைப் போற்ற, எம்மீசன் பெருங்கருணையாளன் உள்ளங்கனிந்து இரு பெருந்திருவிளையாடல்கள் செய்தருளிக் காத்தருளப்பட்டவருமான வாதவூரடிகளைப் பொய்யடிமையில்லாதபுலவரென் றேத்துவதில் இழுக்குத்தானென்னை? சுந்தரருமவர்காலத்தவரும் மாணிக்கவாசகர் மீதுவைத்த பெரும்பத்தியையு மவர் திருவாய்மலர்ந்தருளிய சிறந்த பிரபந்தங்களி னொப்பில்லாப்பெருமையையுந் துலக்க இதுபோலுரித் தான வேறு சிறப்பு வசனமுளதோ? வேம்பத்தூர்நம்பிபாடிய திருவிளையாடற்புராணத்தில், மாணிக்கவாசகரை மெய்யடியானென் றும், பாடன்மாமுனிவரென்றும் கூறியிருத்தல் இங்குகவனிக்கத் தக்கது. ஏனையோரு மிவரை அருள்வாதவூரரென்றும், முத்தமிழ் வாதவூரரென்றும்படைமொழிகூட்டிக்கூறியுள்ளார். அதனால்சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகரைப் பொய்யடிமை யில்லாத புலவரென்று ஆன்றோர்சம்பிரதாயந்தழுவி விவரண மொழியா லோதினரென்பது வழுவாகாதென்று தோன்றுகிறது. இக்கூற்றுப் பெரியோர் கொள்கையோடு முரண்படுதல் நான் சற்றும் மறக்கவில்லை. திருத்தொண்டத்திருவந்தாதியில், "பொய்யடிமை யில்லாப்புலவர்" என்பது பொய்மையில்லாத்தமிழ்ச்சங்கத்திற் றிருவாலவாயான்சேவடிக்குக் கவிபலபாடும் கபிலர்முதனாற்பத் தொன்பது புலவோர்என நம்பியாண்டார்நம்பி பொருள்கூறியிருக் கின்றார். இவ்வாறுபதங்களைச்சேதித்து மற்றோர்முறையிற்கோத்துப் பொருள்கூற ஏற்பட்ட ஆவசியகமென்னை? கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் சைவராவரோ? அவர்களில் ஜயினரும், பௌத்தரு மிலரோ? அன்றியு மடியார்கள்தனிப்பெயர்கூறிவரு மிடையில் சங்கப்புலவர்களை ஒருங்கே கூட்டமாக ஓதநேர்ந்த ஆவசியகமென்னை! 10-வது செய்யுளில் "பத்தராய்ப்பணிவார்க ளெல்லார்க்குமடியேன் பரமனையேபாடுவாரெல்லார்க்குமடியேன்" என்றதில் சங்கப்புலவருட் சிவனடியாராயுள்ளவர்களும் அப்பொது வசனங்களிலடங்காரென்பது எதுபற்றியோதெரியவில்லை. செய்யுள மைப்புக்காக இவ்வாறு ஒரேபொருள்பட இருமுறை சுந்தரர்கூறினு ரென்றால், சுந்தரமூர்த்திநாயனுருக்குக் கூறியதுகூறல் அல்லது மிகை படக்கூறல் என்றகுற்றமும்ஏற்படுத்தவேண்டும். நம்பியாண்டார்

நம்பிகூறியவியாக்யானம் முற்றிலுமாக்ஷேபமின்றி ஒப்பக்கூடியதன்றென்பது திராவிடப்பிரகாசிகையார்வரைந்துள்ள கீழ்வரும்விசேடவுரையால் விளங்கும். "கடைச்சங்கப்புலவர் தமிழ்நாட்டுமூவேந்தரையும் பாடினராக, அவர் தம்மை நம்பியாரூரனார் "பொய்யடிமையில்லாதபுலவர்" என்று போற்றுதல்பொருந்தாதாலெனின்? அம்மூவேந்தர்முதலாயினோர்மையணியுங் கண்டத்திறையனார் மலரடிப்பத்திவழிபாடுதலைநின்று செங்கோன்மையும் வரையாவீகையும் விண்ணும் மண்ணும்போற்ற நண்ணியபெரியராதல்பற்றிக்கடைச்சங்கப்புலவர் அவரையும்பாடினார். அப்பாட்டெல்லாம் அறம்பொருளின்பம் வீடெனு முறுதிப்பொருணான்கின்றிறனும்விளக்கித் தமிழுலகிற்குறுதிபயபயவாநிற்கும். ஆதலினவர் தம்மை நம்பியாரூரர் முதலியோர் போற்றியது பொருத்தமுடைத்தேயாமென்க" என்றார் சபாபதிநாவலர். அவர் நம்பியாண்டார்நம்பியின் கூற்றைத்தாபிக்க இவ்வதிசயயுக்திகூறினர்போலும்! நம்பியாண்டார்நம்பியுரைத்தபொருள் தவறு என்பது திருத்தொண்டர் திருவந்தாதியின் 87-வது செய்யுளால் விளங்கும். அச்செய்யுளில் கூட்டமொன்பானோடறுபத்துமூன்று தனிப்பெயரடங்கிய 11-பாக்களில் 72 அடியார்களைச்சுந்தரர்பாடினரென்று கூறப்பட்டுள்ளது. பெயர்கூறிவிளக்கிய தனியடியார்களின் தொகுதி திருத்தொண்டத்தொகையில் 62 ஆகும். அதனாலும் பொய்யடிமையில்லாப்புலவர் என்பது கூட்டத்தைக்குறிக்குமொழியன்றென்பது காணக்கிடக்கின்றது. அது தனிப் பெயராயின் மாணிக்கவாசகரை யம்மொழி குறிப்பதேயெனவும் சிதமாகும். கோபாலகிருஷ்ணபாரதிநந்தனார் சரித்திரகீர்த்தனையின் பாயிரத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்துதிபாடுமிடத்து "வாதவூரடியாரோடுமற்றறுபத்துமூவர் பாதமேவணங்கி" என்றுபாடியிருப்பதுங் கவனிக்கத்தக்கது. திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகரைச்சுந்தரர் எடுத்தோதவில்லை யென்றாயினுமாகுக. ஆனால் தேவாரத்திலெவ்விடத்தும் மாணிக்கவாசகரைச்சுட்டி ஒதியிருப்பதில்லை என்பது ஒருசிறிதும் பொருந்துமோ? அப்பர் பாடிய திருவாரூர்ப்பதிகத்தில் "நரியைக் குதிரைசெய்வானு" மென்றோதியது சிவபெருமான் மாணிக்கவாசகர் பொருட் டருளிச்செய்தவொரு திருவிளையாடலை நினைந்தோதியதென்ற நம் தமிழ்க்கலைஞர்களின்கொள்கையும் தவறு? அரிமர்த்தன

பாண்டியனுக்காக வாதவூரர் குதிரைவாங்கச் சென்றவிடத்துச் சிவபெருமானுலாட்கொள்ளப்பட்டுக் குதிரைவாங்குவதற்காகக்கொண்டு சென்ற திரவியமுழுதும் சிவாலயத்திருப்பணிக் காக்கியதறிந்த பாண்டியனவரைச்சிறையிலிட்டுக் கடுந்துயரிலாழ்த்த

கலந்துநின்னடியாரோடன்றுவாளாக்களித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னாள்
உலர்ந்துபோனேனுடையானேஉலவாஇன்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே.

என்பதுபோன்ற பலவாசகங்கள்பாடிச் சிவபெருமானைவேண்ட, சிவபிரான் நரிகளைப்பரிகளாக்கிக்கொண்டு பாண்டியன்பாற்கொடுத்த வழி, வாதவூரடிகள் காத்தருளப்பெற்றாரென்ற வோரை திகம்தமிழகத்தில் தொன்றுதொட்டுவழங்கிவருவது யாவருமறிவர். திருவிளையாடற் புராணங்களுள் முன்னதாகிய வேம்பத்தூர் நம்பியியற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் மாணிக்கவாசகர் துயர்தீர்ப்பானாய்

மன்னியவுலகுதன்னில்வித்தின்றிநாறுசெய்வோன்
நன்னெறியில்லாப்பொல்லாநரகரைத்தேவுசெய்வோன்
மன்னியநரிகள்தம்மைமறுகெல்லாம்வாவியேறித்
தென்னன்முன்குதிரையாகச்செய்புதோன்றுமல்விட்டான்.

என்ற பாடலுளது. வேம்பத்தூர் நம்பி இற்றைக்கு 9-நூற்றாண்டிற்கு முன்னிருந்தவரென்பது மகாமகோபாத்தியாயர் ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாதய்யரவர்கள் அந்நூலிற்கு வரைந்துள்ள மிகவுமருமையான முகவுரையால் விளங்கும். அக்காலந்தொட்டேனும் நரியைப் பரியாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகர் பாலருளிச்செய்யப் பட்டதென்றே தமிழரின் துணிபு. முற்கூறிய வேம்பத்தூரார் செய்யுளும் அப்பர் தேவாரப்பதிகத்தை யொட்டியே எழுதப்பட்டதென்பது தடக்கையினெல்லிக்கனியென விளங்கும். ஆகவே 'நரியைக்குதிரைசெய்வானு' மென்று அப்பர் பாடியது மாணிக்கவாசகருக்காகச் சிவபிரானருளி நிகழ்வித்த திருவிளையாடலைக்குறித்தேயா மென்பது தொன்றுதொட்டு மிக்கோர்கொள்கை. புலவர் பெருமானாகிய ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாதய்யரவர்களும் அவ்வாறே

கூறுகின்றார்கள். இக்கொள்கை தவறெனச்சாதிப்பார் தைரியம் வியக்கத்தக்கதே! அது தவறென்பதற்கு இரண்டு ஆதாரங்கள் கூறுவர்.

1. திருவாசகத்தில் இத் திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டுச் செய்யப்பட்டதென்று சொல்லப்படவில்லையாம். இதைப் பற்றி இங்கு விரிவாய் விசாரிக்க அவசியமில்லையென்று நினைக்கிறேன். மாணிக்கவாசகர் இத்திருவிளையாடலைப்பன்முறை யெடுத்தெடுத்து திருவாசகத்திலோதுதலால், அதற்குமவர்க்கும் விசேஷ சம்பந்தமிருத்தல்வேண்டுமென்பது ஊகிக்கக்கிடக்கின்றது. ஆனந்த மாலையில்

"நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையாய்,"

என்றும், அன்னைப்பத்தில் "பாய்பரிமேற்கொண்டென்னுள்ளங்கவர் வரால்" என்றும் திருப்பொன்னூசலில், சிவபெருமான் "ஞாலமிகப் பரிமேற்கொண்டுநமையாண்டான்" என்றும் கீர்த்தித் திருவகவலில் "நரியைக்குதிரையாக்கியநன்மையும்

"ஆண்டுகொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன்றனக்குப்பரிமாவிற்
றீண்டுகனகம்இசையப்பெறாஅ
தாண்டானென்கோ!"

என்றும் மாணிக்கவாசகர்பாடியிருப்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது

2. 'நரியைக்குதிரைசெய்வான்' என்றது மாணிக்கவாசகா பொருட்டு நிகழ்ந்த திருவிளையாடலொன்றைக் குறிக்குமாயின்ஏனைய பதங்கள் எவ்வெவ்த்திருவிளையாடல்களைக் குறிக்கின்றனவென்று வினவுவர். இவ்வாக்ஷேபமும் எளிதில் நீக்கக்கூடியதே. அப்பர் பதிகட யாவருமறிந்ததேயாயினும் அதையிங்கெடுத்தோதல் சௌகரியமாகும். அப்பதிகமாவது:

"நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானு
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சாத்திநின்றனுமாரூரமர்ந்தவம்மானே."

இச்செய்யுளில் "நரியைக்குதிரைசெய்வான்" என்றது நிகழ்ந்த ஒரு லீலையைக் குறிக்குமெனக்கொண்டால் ஏனைய விவரணமொழிக ளொவ்வொன்றும் சிவபெருமானருளிய வெவ்வேறு திருவிளையாடல் களைக் குறித்தோதியதாகவேயிருக்கவேண்டும் என்னும் ஞாயந் துலங்கவில்லை. அம்மொழிகளவ்வாறு கொள்ளப்பெறவேண்டியது ஒருதலையாயின் ஒவ்வொன்றிற்குமுரித்தான சிவலீலையும் எளிதிற் கூறற்பாலது. நரகரைத்தேவுசெய்வானென்றும், விரதங்கொண்டாட வல்லானென்றும், விச்சின்றிநாறுசெய்வானென்றும் இப்பதிகம் விவரித்துக் கூறுகின்றது. நரகரைத்தேவுசெய்வானென்றதிலடங்கிய லீலை, பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்தில் 26-வது லீலை யாகக் கூறப்பட்டுள்ளது. அக்கதையை ஈண்டு விரித்தெழுத அவகாச மில்லை. அத்திருவிளையாடற்கேதுவாகிய பெருங்கொடியோனை உமை யவள் கண்டுழி அவன் செய்தபாவத்துக்களவில்காலம் "வெய்யநா லேழுகோடிநரகிடைவிழுந்தானேனுமுய்வகையிலாதபாவி" என்றும், "நின்னுமஞ்சொன்னோர்வருக்கமு நரகில்வீழக்கருதிநீசெய்தபாவ" மென்றும் திருவாய் மலர்ந்துகூறினரென்றால் அவன் செய்த பாவத் தின் கொடூரமுரைக்கற்பாலதோ? இக்கொடும்பாவியும் ஈசன்திரு வருளால் "பாதகங்கழிந்துதெய்வப்பார்ப்பனவடிவமானான்" என்றும்

"தற்பரவறிவானந்தத்தனியுருவுடையசோதி
பொற்பதமருங்கிற்புக்கான்புண்ணியமறையோனம்மா."

என்றும் பரஞ்சோதி முனிவர் வரைந்துளாராகையால் நரகரைத்தேவு செய்வானென்றது இத்திருவிளையாடலுக்குப்பொருந்துவது காண்க. இனி விரதங்கொண்டாடவல்லானென்றது, பிஞ்ஞகன்கூத்தைக் குறிப்பதுடன், சிவபெருமான் தேவியோடு வாதுகூறி நடனஞ் செய்த திருவிளையாடலையுங் குறிக்கும். இப்பால் விச்சின்றி நாறு செய்வானென்றது, மாலயற்கரியோன்தன்மெய்த்தொண்டனாகிய திருநாளைப்போவான்தில்லைசென்று தரிசிக்கப்பேரவாக்கொண்டது நிறைவேறற்பொருட்டு, அவ்வடியானூழியஞ்செய்துவந்த அந்தணன் நிலத்தில் வித்திடாமலே ஏகராத்திரியிற் செந்நெற்குலைசெழிக்கப் பயிர்விளைவித்த லீலையைக்குறிக்கும். ஆகவே இவ்விரண்டாக்ஷேபங் களும் நீக்கற்பாலனவேயாம். இதுநிற்க, அப்பர் தேவாரத்தில் வேறு சிலவிடங்களிலும் மாணிக்கவாசகரைப்பற்றி ஓதியிருப்பதாகத்

துணிவாய்க்கூறலாம். சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்ததும் மாணிக்கவாசகர்பொருட்டேயாமென்பர் தமிழகத்தோர். "பிட்டு நேர்படமண்சுமந்தபெருந்துறைப்பெரும்பித்தனே" என்று திருவாசகத்துளோதியிருப்பது இங்குகவனிக்கத்தக்கது. இத்திருவிளையாடலை அப்பர் "வையைத்திருக்கோட்டில் நின்றதோர் திறமுந்தோன்றும்" என்று தேவாரத்திற் பாடியுள்ளார். மேலும் திருவிசயமங்கைத் திருப்பதிகத்திலும் அப்பர் "வசையின் மங்கலவாசகர் வாழ்த்தவே" என்று பாடியது மாணிக்கவாசகரைக் குறித்தன்றோவென்று கல்வியின்மிக்கோர் ஆராயத்தக்கது. அஃதெவ்வாறாயினுமாகுக. அப்பர் தனித்திருத்தாண்டகத்துள் "குடமுழநந்தீசனை வாசகனுக் கொண்டார்" என்று பாடியிருத்தலை யாவருமறிவர். ஆங்கு 'வாசகன்' என்றுகூறியது மாணிக்கவாசகராமென்று ஐயமறக் கூறலாம். அதுவே மஹாமஹோபாத்யாயஸ்ரீ ஸ்வாமிநாதய்யரவர்களின் கொள்கை. மாணிக்கவாசகர் நந்தியினவதாரமென்று வடமொழி வல்லுநருமுரைப்பர். அதனால் மூவர் தேவாரத்திலுள்ளும் மாணிக்க வாசகரைப்பற்றி யொன்றுமோதப்படவில்லையென்றல் முற்றுந் தவறேயாமென்று நினைக்கிறேன்.

3. மாணிக்கவாசகர் நாயனார் மூவர்க்குப் பிற்பட்டவரென்று தாபிக்கக்கூறும் வேறொரு காரணம், திருப்பெருந்துறையையும் திரு உத்தரகோசமங்கையையும்பற்றி நாயன்மார் பதிகம் பாடாமல்விட்டதாம். மாணிக்கவாசகர் முற்பட்டவராயிருந்தால் இவ்விரண்டுதிருப் பதிகளையும் தேவாரம் பாடிய மூவரும் மறக்கமுடியாதென்றும் அவர்கள் இச்சிவஸ்தலங்களைப்போற்றிப் பதிகங்கள் பாடாததால் அவர் காலத்திலித்தலங்கள் சிவஸ்தலங்களாய்ப் பெயர் பெற்றிலவென்றுங் கூறுவர். இந்நியாயத்தைக் கைக்கொண்டால் திருவாலவாயும் திரு இராமேச்சுரமுஞ் சுந்தரர் காலத்திற்குப் பிறகே சிவஸ்தலங்களாகப் பெயர் பெற்றனவென்றே கூறவேண்டும். ஏனெனில் அத்திருப்பதிகள் சுந்தரமூர்த்திநாயனாரால் பதிகம் பாடிப் போற்றும்பாக்கியம் பெற்றில. அதே நியாயம்பற்றியே அவ்விரண்டுக்ஷேத்திரங்களையும் பற்றிப் பதிகம்பாடிய ஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தரருக்குப்பிற்பட்டவரேயாகவேண்டும்! இது நிற்க, பெருந்துறையும் உத்தரகோசமங்கையும் தேவாரத்துட் பாடப்படவில்லையென்று கூறுவதுநேரோ? அவ்வி

ரண்டு க்ஷேத்திரங்களும் அப்பர் காலத்திலேயே புகழ்பெற்ற சைவத் திருப்பதிகளாய்க் கருதப்பட்டனவென்று நிச்சயமாய்க் கூறலாம். இத்தலங்களிரண்டும் பதிகம்பெற்ற சிவஸ்தலங்களல்லவென்பது மெய்யே. ஆனால் அப்பர் தமது திருத்தாண்டகத்தில் க்ஷேத்திரக் கோவையிலும் திருஅடைவிலும் பெருந்துறையைப் பெயர்கூறிப் போற்றியுள்ளார். மேலும் இச்சிவஸ்தலத்திற்கு ஆதிகைலாசம் என்று திருநாமமுண்டென்பது பண்டித சிரோமணியாகிய உ.வே சாமிநாத ஐயர் திருப்பெருந்துறைப்புராணத்திற்கு எழுதிய அருமையான முகவுரையால் விளங்குகின்றது. திருநெய்த்தானத்திருத்தாண்டகத்தில் "ஆதிக்கயிலாயனீமேயென்றும்" என்றப்பர் பாடியது. திருவார் பெருந்துறைச்செல்வனைப்போற்றியதாக அம்முகவுரையாலறியக் கிடக்கின்றது. திருப்பெருந்துறையை ஆதிக்கயிலாயமென்று அப்பர் விதந்து கூறினாராயின், அவர் காலத்தில் இத்தலம் சிவஸ்தலங்களுள் மிகப்பெயரும் பழமையும் பெற்றிருந்ததென்று ஐயமறக்கூறலாம். அன்றியும் ஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ள சிவஸ்தலங்களில் திருப் பேணுபெருந்துறையொன்று. "பேணு" என்ற அடைமொழிகூட்டி இவ்வூருக்குப் பெயர் கூறியது, திருப்பெருந்துறையினின்று அதை வேறுபடுத்தற்கன்றோ? அவ்வாறாயின் திருப்பெருந்துறையக் காலத்தே சிறந்திருந்த திருப்பதியாகக் கருதப்படவேண்டும். பேணு பெருந்துறை என்றபதம் திருவாசகத்தேயுள்ளது. "பெண்ணொருபாகனைப்பேணுபெருந்துறையில்" என்ற மாணிக்கவாசகர் வாக்கியத்தோடு "பெண்ணமருந்திருமேனியுடையீர்" "பெண்ணொருபாகரைச்சடையர் சடைமேல்பேணுபெருந் துறையாரே" என்ற ஞானசம்பந்தர் வாக்கு இங்கு சேர்த்தாலோசிக் கற்பாலது. தேவாரவைப்புத்தலங்களுள் பெருந்துறை கூறப்படினும், அது திருப்பதிகம்பாடப்பெறாதது நாயன்மார் மூவருமதைச்சென்று தெரிசிக்காத காரணம்பற்றியேயாகும். அன்றியும் நாயன்மார் பாடியது 10,300 பதிகங்களென்றும் அவற்றுளிப்பொழுது 796-பதிகங்கள் மாத்திரமே எஞ்சிநிற்பனவென்றும் பெரியோர் கூறுவர். மேலும் பெருந்துறை யென்ற க்ஷேத்திரம் ஆளுடையார் கோவில் தானோவென்றும் சந்தேகந்தோன்றவிடமுளது. அது ஓர் துறைமுகமாயிருத்தல்வேண்டும். "தாவுமாவிறங்குடட்டின" மென்றும் "வேலையந்துறை" யென்றும் "நெடும்புவிசார்தருமாழ்கடலின்கரை"

யென்றும் அவ்வூர் வர்ணிக்கப் பெற்றுளது. அது குடதிசையின் கண்ணுள்ளதென்றும், மிடைந்த பதியுங்கடமும் வெற்புங்கடந்து அவ்வூர் சேர மாணிக்கவாசகர் சென்றனரென்றும், அது தெங்கு திறள் சோலைகளாற் சூழப்பட்டதென்றும், பலவும் பைங்கமுகும் செழித்துவளருமிடமென்றுங் கூறப்பட்டுளது. குருந்தமரமும் மலை நாட்டுமரமாகக் காணப்படுகிறது. அதனால் பெருந்துறை மலைநாடாகிய மலையாளநாட்டிலிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். மலையாளத்திலிப்பொழுதும் வழங்கிவரும், அச்சனன், எந்துவே, நின்னலே, என்பன முதலிய சொற்கள் திருவாசகத்தில் பிரயோகிக்கப் பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. மலையாளவிராச்சியத்துப்பிரதான சிவஸ்தலமாகிய வைக்கத்திற்கு வாதபுரீசுவரம் என்றபெயர் வழங்குகிறதாம். அவ்வூர் க்ஷேத்திரத்துமூர்த்தியின் திருநாமம் பெருந்துறை கோவிலப்பனென்றாகும். அங்கு வெகு பக்தியுடன் நடத்திவரும் அட்டமித்திருவிழாவும், சிவபெருமானத்தினம் பக்தனொருவனுக்கு ஞானசாரியனாய்த்தோன்றி யுபதேசஞ்செய்துவித்த பெருமையை விளக்குமென்பர். இச்சிவஸ்தலமிருப்பது அரபிக்கடலைச்சார்ந்து கிடக்கும் வேம்பனாடு என்று பெயர்விளங்கிவரும் ஒருபெரிய ஏரிக் கரையிலானதால் அந்த பிரதேசம் முற்காலத்தில் பாண்டிநாட்டைச் சேர்ந்திருந்ததென்பது தெள்ளிதிற் பெறலாம். கி. பி. 80-வது வருஷத்திய பெரிப்ளஸ் என்ற நூலால் அவ்விடம் அக்காலத்தில் பாண்டிய ஆட்சிக்குட்பட்டிருந்ததாகவும் அவ்வேரிக்கரையில் பெரிய தோர் துறைமுகம் விளங்கிவந்ததென்றும் புலப்படுகிறது. ஆகவே "தென்னன்பெருந்துறை" என்று மாணிக்கவாசகர் பன்முறை கூறுவது இத்தலத்திற்குப் பொருத்தமேயாகும். ஸ்ரீமாந்-சாமிநாதய்யரவர்கள் ஆளுடையார் கோவில் மிழலைக்கூற்றத்திலுள்ளதென்றும், மிழலைக்கூற்றம் நெய்தனிலத்தைச்சார்ந்ததே யென்பது புறநானூறு 24-ஆம் செய்யுளால் வெள்ளிடைமலைபோல் விளங்குகிறதென்றும், அதனால் இவ்வூர் கடற்கரையிலுள்ள ஊரன்று என்பதுபோன்ற வாதம் தவறென்றும், திருப்பெருந்துறைப் புராணத்தின் முகவுரையில் எழுதியிருக்கின்றார். திருப்பெருந்துறைப்புராணம் பாடிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள், பாண்டியன் வாதவூரரைக் குதிரைகள் வாங்கிவரவனுப்பினதாகக் கூறுமிடத்து

"உவர்படுகுணகடற்பாலுறுதுறையினைத்தும்வந்த
வவரவர்தேயத்துள்ளவபெரியனைத்துமென்றார்" என்றும்

"கன்றல்செய்காடுநாடுங்கடந்துகீழ்கடற்கரைக்கட்
சென்றுவாம்பரிகளெல்லாங்கொள்ளுதிர்சிறப்பவென்றான்"

என்றும்பாடியுள்ளார். வாதவூரடிகள் உபதேசம்பெற்றஸ்தலம் 'திரை யெறிநெய்தல்' சார்ந்தவிடமேயாம். அது பாண்டிநாட்டிலிருந்திருக்க வேண்டும். ஆனல், பாண்டிநாட்டுக் "குணகடற்பாலுறுதுறை"கள் அக்காலத்தில் 'தாவுமாவிறங்குபட்டினங்க' ளாகக்காணப்படவில்லை. முற்காலத்தில் அரபியாமுதலிய குடதிசைநாடுகளிலிருந்தே குதிரைகள் பாண்டிநாட்டுமேற்கடற்கரையில்வந்திறங்கினவென்று நினைத்தற்கு இடமுள்ளது.

"யவனர்தந்தவினைமாணன்கலம்
பொன்னெடுவந்துகறியொடுபெயரும்
வளங்கெழுமுசிறி"

எனவும் பிறவாறும் தொன்னூல்களிற் கூறப்பட்டிருத்தலால் மேல் கரையில் யவனவியாபாரிகளின்கப்பல்கள் மிகுதியாகவந்தனவென்று எளிதிற்கொள்ளலாம். ஈண்டுக்கூறும்யவனர் பெரும்பாலும் சோனகர் என்னும் யவனராவர். சோனகம் இந்தியாவுக்குமேல்பாலுள்ள நாடுகளிலொன்றாகையால், அது அரபியாவென்றுகருதப்படுகிறது. தமிழ்மக்கள் சோனகரை யவனரென்றுவழங்கிவந்தனரென்பது "சோனகர்யவனர்" என்ற திவாகரத்தாலும், பத்துப்பாட்டில் யவனரென்றபதம் வருமிடமெல்லாம் நச்சினார்க்கினியர் சோனகர்என்று உரைகூறிப்போதலாலும்விளங்கும். கீழைக்கரையில் குதிரைகள் பண்டைகாலத்தில் இறக்குமதியாகவில்லையென்று நான்கூறவில்லை. சோழன் இராசதானியாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதியாகும் பண்டங்கள் கூறுமிடத்து 'நீரின்வந்தநிமிர்பரிப்புரவியும்' என்று பட்டினப்பாலையில் கூறியிருப்பதால், அத்துறைமுகத்தில் கரிகாலன்காலத்தே கடல்வழியாக நாவாயில் குதிரைவந்திறங்கின வென்பது தெற்றெனவிளங்குகின்றது. ஆனல் மாணிக்கவாசகர் பாண்டிநாட்டுக் கடற்கரைத்துறைக்குப்போனரேயன்றி சோழநாட்டிற்குச்சென்றதாக நினைக்கஹேதுவில்லை.

"குதிரையைக்கொண்டுகுடநாடதன்மிசைச்
சதுர்படச்சாத்தாய்த்தானெழுந்தருளியும்" என்ற திருவாசகமும் ஈண்டாலோசிக்கத்தக்கது.

நிற்க; உத்தரகோசமங்கை வெளிப்படையாய்த் தேவாரத்தினெங்கும் கூறப்படவில்லை. ஆனால் "அதியரையமங்கையமர்ந்தான்றன்னை" யென்று அப்பர்கூறியது உத்தரகோசமங்கையில் சிவபெருமான் வலைவீசி, யரையன்மகளாய்வளர்ந்தபார்வதியை விரும்பி மணந்த திருவிளையாடலைச்சுட்டுமன்றோ! இதுவே பண்டிதசிகாமணியாகிய மகாமகோபாத்தியாய ஸ்வாமிநாதய்யரவர்களின் கருத்தாம். உத்தரகோசமங்கையில் இப்பொழுதும்நடைபெறும் ஒரு திருவிழாவும் இத்திருவிளையாடலை விளக்கும்.

4. இனி நாயன்மார்மூவரும் திருவாலவாயில்நிகழ்ந்த திருவிளையாடல்களை அறியாதாராயிருக்க, மாணிக்கவாசகர் அத்திருவிளையாடல்கள்பலவுமறிந்தனராதல்பற்றி, அவர் திருவிளையாடற்புராணத்திற்கு பிற்பட்டவராதல்வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். மாணிக்கவாசகரைப்பற்றிக்கூறுந் திருவிளையாடற் புராணத்திற்குப் பின் அவர் தோன்றினரென்பது என்னபுதுமை! தேவாரம்பாடிய நாயன்மார்கள் மதுரைத்திருவிளையாடல்களையறியாரென்னலொரு சிறிதும் பொருந்துமோ? அப்பர் தேவாரத்துள்

(1) நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி நற்கனகக்கிழிதருமிக்கருளினோன் காண்
(2) வலைவிலியாயெல்லோர்க்குமருள்செய்தானை
(3) அதியரையமங்கையமர்ந்தான்றன்னை
(4) பாலவிருத்தருமானார்தாமே
(5) பாலவிருத்தனுமானான்கண்டாய்
(6) விருத்தனாய்ப்பாலனாகி
(7) பாலனாய்விருத்தனாகி

என்பனமுதலியவாசகங்களும், ஞானசம்பந்தர் தேவாரத்துள் "பட்டிமன்றேன்னன்" ஆலவாயரன்கையதுவீணையே" என்பனபோன்ற வாசகங்களும் திருவாலவாயான் திருவிளையாடல்களைக்குறிப்பது தெள்ளிதிற் காணலாம். அதனால் இக்கூற்றுந்தவறேயாம்.

நாமாராய்ந்துமுடித்தவிக்காரணங்களே மாணிக்கவாசகர் நாயன்மார்மூவர்க்கும் பிற்பட்டவரென்றுசாதிப்பதற்கு பிறரெடுத்துக் கூறும்ஞாயங்கள். அப்பால் திருவாசகத்துள்ளே "கண்ணப்பர் சண்டீசர்களைத் துதிப்பவர் திருஞானசம்பந்தர் முதலியோரைத் துதிக்காமையாலும் 'சிறிப்பார்களிப்பார்தேனிப்பார்' என்னுந் திருவாசகத்திலே தேனித்தல் என்னுஞ்சொல்வழக்கும், உவலைமுதலிய அரியசொற்களும் பிற்காலத்து வழக்கன்மையாலும், திருவாசகம் தேவாரத்துக்குமுந்தியதென்பது நன்றாகத்துணியப்படும்" என்று ஸ்ரீமான் இராமநாதன்கூறியதுங் கவனிக்கத்தக்கது. அதுவுமன்றி தேவாரப்பதிகங்கள் பெரும்பான்மையும் விருத்தமுறையில் எழுதப்பட்டனவாக, திருவாசகத்தின் செய்யுளிலக்கணம் சங்கநூல்களின் பாவிலக்கணத்தை மிகுதியுமொத்திருத்தல்பற்றி, ஸ்வாமிவேதாசலம் திருவாசகம் தேவாரத்துக்குமுந்தியதென்று வரைந்துள்ளார். இதுவே தமிழ்க்கலைஞரின் பெரும்பான்மையோர் கருத்து. பச்சிம நாட்டுத் திராவிடவித்வான்கள்கொள்கையு மிதுவேயாகும்.

பின்னால் ஆராய்ச்சிசெய்வான் எஞ்சியவிஷயமிரண்டே அவற்றுளொன்று: மாணிக்கவாசகர் சிதம்பரத்தைப் பொன்னம்பலமென வழங்கலால் அவர்காலம் பராந்தகன்காலமாகிய 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகவேண்டுமென்பது. மற்றொன்று:அவர் வரகுணனைப்பற்றிக்கூறியிருப்பதால், வரகுணன்காலமாகிய 9-வது நூற்றாண்டின்பிற்பகுதிக்குப்பிற்பட்டே மாணிக்கவாசகர் தோன்றியிருக்க வேண்டுமென்பது.

சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்றுகூறுவோர்யாவரும் பராந்தகன்காலமாகிய 10-வது நூற்றாண்டினுதிவருடங்கட்குப்பிற்பட்டவர்தாமோ? அப்பர் பல பதிகங்களில் சிதம்பரத்தைப்பொன்னம்பலமென்றே பாடியிருக்கின்றார். அவ்வாறுபாடியிருத்தலோடொரிடத்து

> "தூயசெம்பொன்னினெலெழுதிமேய்ந்த
> சிற்றம்பலக்கூத்தனை"

என்றும்பாடியுள்ளார். ஆயினும் அப்பர்காலம் 7-வதுநூற்றாண்டு அதாவது சிதம்பரத்துத்திருக்கோயிலைப் பொன்னோடிட்டுமூடிய பராந்தகன்காலத்திற்கும் மூன்றுநூற்றாண்டுக்குமுன்னர் என்பது

யாவருமொப்பும்விஷயம். அவ்விதமிருக்க சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்றுபோற்றிய மாணிக்கவாசகர் பராந்தகன்காலத்திற்குப் பின்னரே தோன்றியிருக்கவேண்டுமென்று துணிவது எஞ்ஞாயம் பற்றி? பொன்னம்பலம் - என்றால் பொன்னாலமைந்தகோயில்என்று தான் பொருட்படவேண்டுமோ? மதுரையை 'அம்பொனாலவாய்' என்றுதேவாரத்தும் 'ஆடகமதுரை' என்று திருவாசகத்தும்கூறியுள்ளது ஈண்டாலோசிக்கத்தக்கது.

"கச்சித்திருவேகம்பன்செம்பொற்கோயிற்பாடி" என்றதிருவாசகத்தில் செம்பொற்கோயிலென்றதற்கு செம்பொன்னாற்செய்யப்பட்ட கோயிலென்றேபொருள்? சிதம்பரத்திற்குப் பொன்னம்பலமென்று பெயர்வாய்ந்தது திருக்கோயிலின் ஒப்பற்றவுயர்வும் மகிமையும் பற்றியன்றி பொற்றகடிடப்பெற்றகாரணம்பற்றியாமெனின், பராந்தகன் காலத்திற்குமுன்னரே ஹிரணியவன்மனால் அத்திருப்பதி பொன்கூரையடைந்து பொன்னம்பலமாகவேவிளங்கியதென்று திருக்கோயிற்புராணத்தில் உமாபதிசிவாசாரியார் கூறியிருப்பதுங்கவனிக்கத்தக்கது; அன்றியும் பத்தாவதுநூற்றாண்டினராகிய நம்பியாண்டார்நம்பிகாலத்திலேயே மாணிக்கவாசகர் பெரியதோர்சைவசமயாசாரியராகக்கருதப்பட்டாரென்று முன்னரேகூறியுள்ளேன். ஆகையால் மாணிக்கவாசகர் அந்நூற்றாண்டிலேயே தோன்றினவரெனக் கொண்டால், அவர் பராந்தகனுக்கு அதிககாலம்பிற்பட்டவராதலரிது. அப்படியானால் சிதம்பரத்திற்குப் பொன்னம்பலம் எதார்த்தநாமமாகும்வண்ணம் திருச்சிற்றம்பலத்தைப் பொன்னோடுவேய்ந்து அழியாப்பெயரும்புகழுமடைந்த பராந்தகனை, அக்கோயிற்றிருமுற்றத்தினின்றுபாடிய கோயில்மூத்த திருப்பதிகத்திலும் மாணிக்கவாசகர் முற்றும்மறந்தாரென்றுகூறவேண்டும். இது சம்பவிக்கத்தக்கதோவென்று ஆலோசிக்கவேண்டும். மாணிக்கவாசகர் பராந்தகனுக்குப்பின்றோன்றினாரென்றுகூற ஒருஞாயமுமில்லை. பின்னர் வரகுணன்விஷயமெவ்வாறு? "வரகுணனுந்தென்னவனேற்றுஞ்சிற்றம்பலம்" என்று திருக்கோவையாரில் கூறியிருத்தல் மெய்யே. சுந்தரபாண்டியனென்றதை அழகுபொருந்திய பாண்டியனென்று பொருள்கொள்ளுதல்போல, ஈண்டு 'வரகுணன்' என்றதை சிலாக்கியமானகுணம்பொருந்தியவனென்று பொருள்கொள்ளுதல் தவறோமோ?

பேராசிரியர்உரையில் வரகுணபாண்டியனை இதுகுறிப்பதாக எழுதியிருத்தலால், மாணிக்கவாசகர் ஒருவரகுணபாண்டியனைப்பாடியதாகவேவைத்துக்கொள்வோம். தென்னிந்திய சிலாசாஸனங்களால், 8-ம் நூற்றூண்டின்பிற்பகுதியில் ஒருவரகுணனும், 9-ம் நூற்றூண்டின் பிற்பகுதியில் ஒருவரகுணனும், இங்ஙனம் இரண்டுவரகுணபாண்டியர்கள் இதுகாறும் காணப்பட்டனராக அறிகிறோம். அவ்வாறாயின் சாஸனங்களால் வெளிப்படாத வேறு வரகுணபாண்டியர்களும் முன்னிருந்தனரென்று யூகிப்பதிலிழுக்கென்னை? மாணிக்கவாசகர்கூறும் வரகுணன்காலத்து, சிதம்பரம் பல்லவராட்சியில் வரவில்லையென்பது முன்னுரைத்த திருக்கோவையார்வாசகத்தால் காணக்கிடக்கிறது. அப்படியாளுல் அந்தவரகுணன் 5-வது நூற்றூண்டிற்குமுற்பட்டவனுக வேண்டும். இப்பாண்டியனைப்பற்றிய திருவிளையாடல் யாவருமறிவர். இவனைப்பற்றிய பிரமகத்தி, இவன் திருவிடைமருதூர்சென்றுழி

> "நீதிவாயிலினின்றதுநீன்மதிற்புறத்தாங்
> கேதமேதரவருந்திறலிரும்பிரமகத்தி"

என்றார் வேம்பத்தூர்நம்பி. அப்பர் இச்சிவஸ்தலத்தைப்பற்றிபாடிய பதிகங்களில்

> "ஏதந்தீர்க்குமிடைமருதா"
>
> "பத்தர்கடங்கண்மேலையேதங்கடீரநின்றார்"
>
> "ஏதங்களானகடிவார்போலும்"

என்பனபோன்றுபாடியுள்ளார். அதனுல் அப்பர்காலத்தே வரகுணபாண்டியனுக்கு 'ஏதமேதரவருந்திறலிரும்பிரமகத்தி' திருவிடைமருதூரில் சிவகிருபையால்நீங்கியது அடியார்களறிந்துள்ளாரென்பது யூகிக்கலாம். திருவிளையாடற்புராணத்தில் திருவாலவாய்மேவிய சிவபிரானின் திருவருள்பெற்றபாண்டியரின்வரிசை கூறப்பட்டுள்ளது. அந்நூலிலடங்கியகதைகள் கட்டுக்கதைகளெனக்கொண்டாலும் அதிற்கூறியிருக்கும் அரசர்கள் தம்முளுள்ளகாலமுறைமையும் பரம்பரையும் தொன்றுதொட்டுவழங்கிவந்த கர்ணபரம்பரையைத்தழுவியே வரையப்பட்டனவெனக்கொள்ளுதல் தவறுமோ வரகுணன் 19-வதாகவும் ஞானசம்பந்தர்காலத்தினராகிய கூ

பாண்டியன் 73-வதாகவும் திருவிளையாடலில் கூறப்பட்டுள்ளார். அவ்வாறாயின் வரகுணன் 7-வது நூற்றாண்டிற்குவெகுகாலத்திற்கு முன்றோன்றியவனாகவேண்டும். மாணிக்கவாசகரை மந்திரியாகக் கொண்ட அரிமர்த்தனபாண்டியன் கூன்பாண்டியனுக்கும் பன்னிரு பாண்டியருக்கு முன்றோன்றியவனென்று ஹாலாசியம்புகலும். அவ்வாறாயின் மாணிக்கவாசகர் 4-வது நூற்றாண்டிலிருந்திருக்க வேண்டும். இதுவே எம் கருத்தாகும். அதை யிப்பால் ஒருவாறு தாபிக்கப்புகுவன். இக்கருத்திற்குப்பிறசான்றுமுளது.

மாணிக்கவாசகர் அப்பர்காலத்திற்குமுற்பட்டவரென்பது முன்னரேகண்டுளோம். அன்னவரை நந்தியினவதாரமாக அப்பர் கூறியேத்தினராகையாலும், அவர்பாலருளிய திருலீலைகளைக்கூறிச் சிவபெருமானைப் போற்றினராகையாலும் நீண்டகாலம் இவ்வைதிகங்கள் கர்ணபரம்பரையில்வழங்கி நின்றிருந்தாலன்றி அப்பர் இவ்வாறு பேணிப்புகலாராகையாலும், மாணிக்கவாசகர் அப்பர்காலத்திற்குக் குறைந்தது 200 வருடங்கட்குமுன்னவரென்றுகொள்ளுதலமைவுடைத்தாம். திருக்கோவையாருக்குச் சிறந்ததோருரை பேராசிரியரியற்றியுள்ளாராதலால், அவர்காலத்தில் அந்நூல் தமிழ்த்திருமறை போலுங்கணிக்கப்பெற்றதென்று கொள்ளலாம். அவ்வாறாயின் பேராசிரியர்காலத்திற்குச் சாலவும்முன்னர் மாணிக்கவாசகரவதாரகாலமிருக்கவேண்டும். பேராசிரியர் 7-வது நூற்றாண்டின் கடையிலாவது 8-வது நூற்றாண்டினடியிலாவதிருந்திருக்கற்பாலரென ஸ்ரீமான் அனவரதநாயகம்பிள்ளையவர்கள் நிரூபித்திருக்கின்றாராகையால், மாணிக்கவாசகர் 4 அல்லது 5-வது நூற்றாண்டிற்குப் பின்றோன்றினவராகாரெனலமையும் மாணிக்கவாசகர் திருச்சாழலையும் திருக்கோத்தும்பியையுந்தழுவி திருமங்கைமன்னரும்பாடியுள்ளார். அவ்வாழ்வார் வைரமேகன்காலத்தவரென்பது அவர்பாடிய பெரிய திருமொழி இரண்டாம்பத்துஎட்டாந்திருமொழியாற்புலப்படும். வைரமேகன்காலம் 8-வது நூற்றாண்டென்றுவரையறுக்கப்பட்டுளது. ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களும் மிக்கவாராய்ச்சி செய்து திருமங்கைமன்னன் காலம் 8-வது நூற்றாண்டின் முற்பகுதியெனத்தாபித்திருக்கிறார்கள். நம்மாழ்வார்தாமும் மாணிக்கவாசகருக்குப்பிற்பட்டவரென்று ஸ்ரீமான் கோபிநாதராயருமொத்துக்

கொள்ளுகிறார். ஆகையால், திருமங்கைமன்னன் மாணிக்கவாசகருக்கு வெகுகாலத்திற்குப்பின்றோன்றியவராதலொருதலை. மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சிபாடியதுபோல தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். இவ்வாழ்வார் திருமங்கை மன்னற்கு நூறுவருடங்கட்கு முன்றோன்றியவரென்பதான்றோர் துணிவு. அதனால் மாணிக்கவாசகர் 6-வது நூற்றாண்டிற்குமுன் வந்தவரெனக்கொள்ளுதல் பொருத்தமுடையதொன்றும். தொண்டரடிப்பொடியாழ்வார்காலத்திற்குமுற்பட்ட சூடிக்கொடுத்தநாச்சியார், மாணிக்கவாசகரின் குயிற்பத்தையும் திருப்பாவையையுந் தழுவிப்பாடியிருத்தல்நாமறிவோம். ஆகையால் ஆண்டாள் காலத்திற்கும்முந்தினவர் மாணிக்கவாசகரென்பது காணக்கிடக்கின்றது. நம்மாழ்வார் தாமும் மாணிக்கவாசகருக்குப்பிற்பட்டவரென்பது தமிழ்ப்பாவலர்காலவாராய்ச்சி செய்வார்களின் கொள்கை. நம்மாழ்வார் திருவாய்மொழியின் பாவிலக்கணம் தேவாரத்தின் பாவிலக்கணத்தைப்போன்றது. திருவாய்மொழியென்ற நூற்பெயரே திருவாசகம் என்ற பெயர்பற்றிவந்ததெனக்கொள்ளலாம். மாணிக்கவாசகர் திருச்சதகத்தில்,

> "ஊராமிலைக்கக்குருட்டாமிலைத்திங்குன்றுளிணையன்புக்
> காராவடியேனயலேமயல்கொண்டழுகேனே"

என்றெழுதியுள்ளதை மேற்கோளாக நம்மாழ்வார் திருவிருத்தத்தில்

> "எப்படியூராமிலைக்கக்குருட்டாமிலைக்குமென்று
> மப்படியானுஞ்சொன்னேனடியேன்மற்றியாதென்பனே"

எனவெடுத்து வரைந்திருத்தல் கவனிக்கவேண்டியதொன்றும். அதுபோல,

> "இன்றெனக்கருளிஇருள்கடிந்துள்ளத்தெழுகின்றஞாயிறேபோன்று
> நின்றநின்றன்மைநிலைப்பறநினைந்தேன்நீயலாற்பிறிதுமற்றின்மை [வனே
> சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றுந்திருப்பெருந்துறையுறைசி
> ஒன்றுநீயல்லைஅன்றியொன்றில்லைஆருன்னையறியகிற்பாரே."

என்ற திருவாசகத்தின் பதமுங்கருத்தும்

"நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுள்நேர்மையதுவிதுவென்று
ஒன்றுமொருவர்க்குணரலாகாதுணர்ந்துமேலுங்காண்பரிது
சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேய்ந்தற்று
நன்றுதீதென்றறிவரிதாய்நன்றாய்ஞானங்கடந்ததே."

என்ற திருவாய்மொழியிலமைத்து நம்மாழ்வார் பாடியிருப்பது மீண்டு நோக்கற்பாலது. இவ்வாறு மாணிக்கவாசகரின் வசனமுங் கருத்தும் நம்மாழ்வாரெடுத்தோதப்பெற, மாணிக்கவாசகர் நம்மாழ்வாருக்கு நூறு அல்லது ஐம்பது வருடங்கட்கு முன்னாவது பாடியிருக்கவேண்டும். நம்மாழ்வார்காலம் யாது? அவரருளிய திருவாய்மொழி ஸ்ரீரங்கத்திற் பாடவும் அவருக்கு பூசைவழிபாடு செய்யவும் திருமங்கைமன்னன் ஏற்பாடு செய்தனராகையால் நம்மாழ்வார் திருமங்கையாழ்வாருக்கு வெகுகாலம் முற்பட்டவராதல்வேண்டும். அன்றியும் திருமங்கையாழ்வாருக்கு முன்றோன்றியவரும் நம்மாழ்வாருக்கு மிகக பிந்தினவருமாகிய பெரியாழ்வார், நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறனென்ற கூன்பாண்டியன் காலத்தவரென்பது அவர் பாடிய பிரபந்தங்களாற் காணலாம். கூன்பாண்டியன் திருமங்கை மன்னனாற் சந்திக்கப்பட்டவரான திருஞானசம்பந்தர்காலத்தவன். அதனால் 7 அல்லது 8-வது நூற்றாண்டின் முற்பகுதியில் திருவரங்கத்திலேயே வைணவரால் எம்பெருமானினம்சமெனக் கருதப் பெற்று நம்மாழ்வார் வழிபடப்பெற்றாரென்றால், அப்புண்ணிய புருடன் 5-வது நூற்றாண்டிற் ப் பின்தோன்றியவரல்லரெனக் கொள்ளுதல் சாலவும்பொருந்தும். தமிழ்நாட்டுப் பழையகால சரித்திரவாராய்ச்சியில் மிக்க வல்லுநராகிய ஸ்ரீமாந்-S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களும் அதே கருத்துக்கொண்டுள்ளார். அவ்வாறாயின் மாணிக்கவாசகர் காலம் 4-வது நூற்றாண்டிற்குப் பிற்பட்டதன்றென லமையும். இக்கருத்தையொப்பிக் காலஞ்சென்ற Pope ஐயரும் அவிறப்பதற்கு சொற்பகாலத்திற்கு முன்னனுப்பியவோர் கடிதத்திலெழுதியுள்ளார். ஸ்ரீமாந்-S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் மகாமகோபாத்தியாய பண்டிதசிகாமணி சாமிநாதையரும் இக்கருத்தைத் தழுவிக்கடிதங்கள் வரைந்திருக்கிறார்கள். Imperial Gazetteer என்ற நூலிலும் இக்கருத்து இப்பொழுது அங்கீகரிக்கப்பெற்றுள்ளது. அதனால் மாணிக்கவாசகர் 4-வது நூற்றாண்டிற்குப் பிற்பட்ட

பாதல்கூடும், ஏனெனில் திருக்கோவையாரில் நூறுபாக்கட்கு அகப்பொருளிலக்கண வமைதிமுற்றும் பெறவில்லையெனக் கடைச் சங்கப்புலவருள் ஒருவராகக் கருதப்படும் கல்லாடர்வாதிக்க, அங் ஙனமாயின் அவ்விலக்கணமுற்றும் உரைப்பாவினலமைத்துக்காட் டுகவென்னும் வேண்டுகோளுக்கிசைந்து கல்லாடம்பாடினரென்று ஐதீகமிருத்தலின் உரைப்பாப்பாடின கல்லாடர் காலத்திற்கு பிற்பட்ட வரல்லர், மாணிக்கவாசகர் என்பது தெள்ளிதிற்பெறலாம். தலை யானங்கானத்துப்போர்புரிந்த நெடுஞ்செழியனைப் புறநானூற்றில் கல்லாடர் பாடியிருத்தலால் அப்பாண்டியன்காலத்தவராவர் கல்லாட னர். நெடுஞ்செழியன் கோவலன்பாற்செய்த கொடியபிரவர்த்தியால் சிலப்பதிகாரக் கதாநாயகியாகிய கண்ணகியின் பெருந்துயரும் கோர மான மரணமும் நேர்ந்தனவென்பது யாவருமறிவர். அக்கண்ணகிக் குக்கோயிற்கட்டி செங்குட்டுவன் திருவிழாக்கொண்டாடியகாலத்து இலங்கைமன்னன் கஜபாகு உடனிருந்தானென்பது சிலப்பதிகாரம் வரந்தருகாதை அடி 160-ஆல் அறியக்கூடக்கின்றது. கஜபாகு தென் னிந்தியாவுக்குச்சென்று பத்தினிதேவியின்வளையொன்று இலங்கைக் குக் கொண்டுவந்ததாக இராஜாவளியென்ற இலங்கைச்சரித்திரம் கூறும். கஜபாகுவின் ஆட்சி கி. பி. இரண்டாம்நூற்றூண்டென்று துணியப்படுவதால் கல்லாடர்காலம் கி. பி. இரண்டாம்நூற்றூண்டிற்கு சமீபித்தகாலமெனல்பொருந்தும். ஆகவேஎவ்வகையானும் மாணிக்க வாசகர் கடைச்சங்கக்காலத்திற்கு சமீபத்திற்றோன்றியவரென்று கொள்ளுதல்அமையும். மேலும் மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் சமய வாதுக்காக இலங்கைமன்னனேடுவந்த புத்தசமயத்தாரை வாதில் வென்று இலங்கையரசின் புத்திரியை புத்தசமயத்தினின்று விடு வித்து சைவசமயவழிப்படுத்தினரென்பும் அவ்வாறே திருச்சாழலி லடங்கியிருக்கிறதென் றுங்கலைஞர்கூறுப. கி.பி. 254 முதல் 267 வரூக இலங்கை மன்னனயிருந்த மேகவர்ணபையன்காலத்திற் சோழநாட்டுச் சைவசமயாசாரியனொருவனுக்கும் இலங்கை புத்தமதாசாரியனொருவ னுக்கும் வாதுநடந்ததென்றும் சைவசமயாசாரியன் வாதில்வென்று இலங்கைமன்னனுடைய விளையமகனைச் சைவசமயநெறிப்படுத்தின னென்றும் மகாவம்சோவென்ற இலங்கைசரித்திரம்கூறும். இவ் வரலாறு மாணிக்கவாசகரைக்குறிக்குமெனக்கொள்ளுதல் மிகவும்

பொருத்தமுடையதே. அவ்வாறனுல் மாணிக்கவாசகர் 3-வது நூற்றாண்டி னிடைப்பட்ட காலத்திற்குப் பிற்பட்டவரல்லரென்று துணிதல் தவறாகாது என்றுகூறலாம். ஆகவே மாணிக்கவாசகர் இற்றைக்கு ஏறக்குறைய 16 அல்லது 17 நூற்றாண்டுகட்குமுன், “கொண்டலனகண்டனருட் கொண்டுதமிழ்பாடித்தொண்டுபடுமன்பராய்,” “தெளிபொருள்சிவமேயென்றுபொருந்தியமனத்தராய்” சிந்தையுஞ்செயலுமொருங்கேசிவன்வழிப்படுத்தி ‘பேரறியாதவனேகபவங்கள்பிழைத்து’ ‘நாமெனவந்தபிணக்கறுத்து,’ சிவாநந்தவெள்ளத்தில் மூழ்கிக்களித்து, சிவநெறிவிளக்கித் தாம்பாடிய தமிழ்மறையின்சொற்பொருளாய்நின்ற மெய்ப்பொருளாகிய அம்பலத்தாடுமையனது ஒண்சுடர்க்கொழுமலர்த் திருவடியிணையில் ஒன்றியடங்கிஞரெனக்கோடல் சாலவும்பொருந்தும்

முற்றிற்று.